மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

லர் 6—இதழ் 32 ★ 8-12-57 சென்னை ★ விலை 16 காசு

ஐந்தாண்டுத் திட்ட அவதி!

—(o)—

ப்பதற்கும் வகையில்லை! கைவிடவும் மனமில்லை!

—(o)—

ஆளவந்தார்களின் திகைப்பு!

—(o)—

இரா. செழியன்

உலகத்தில் வேறெங்கும் இல்லாத அள ...க்கு இந்தியாவில்தான் பிச்சைக்காரர்கள் ...ட்டம் அதிகம்!

...ந்தியாவில் பிச்சை எடுப்பது ஒரு இழி ...ன செயலாகக் கருதப்படவில்லை. குடும் ...த்தில் இருப்பவனைவிடச் சந்நியாசக் ...கோலத்திலிருப்பவனுக்கு அதிக மதிப்புத் ...ரப்பட்டது! கிருகஸ்தனாக இருப்பவன் ...ட அதற்கடுத்தபடியான சந்நியாசியாக ...வேண்டுமென்றுதான் சாஸ்திரங்கள் கூடக் ...றுகின்றன! பிச்சை போடுவது எந்த ...ளவு புண்ணிய காரியமாக மதிக்கப்பட் ...தோ அந்த அளவு பிச்சையெடுப்பதும் ...ண்ணிய காரியமாகக் கருதப்பட்டது!

கடவுளைச் "சாமி" என்று அழைப்பது ...ால, பிச்சையெடுப்பவர்களையும் "சாமி" ...ன்று அழைக்கும் நிலை இருந்தது! கடவுள் ...ரத்துக்கு பிச்சையெடுப்பவனும் உயர்த் ...ப்பட்டுவிட்டான்!

"பகவதி பிட்சாந்தேஹி" என்ற குரலில், ...ச்சை ஏற்கும் இரக்கம் ஒலிக்கவில்லை, ...ச்சை கொடுக்கும்படி ஆணையிடும் ஆணை ... இருந்தது! "பிச்சை இடுகிறாயா? ...ல்லையென்றால் ரௌரவாதி நரகம் உனக் ...ச் சம்பவிக்கும்" என்ற மிரட்டுதல் பிச் ...சைக்காரர்களிடம் இருந்தது!

இந்தியாவில், காவியணிந்தால் போதும், ...டவர்கள் அடிபணிந்து உடனே வணங் ...வார்கள் எனப் பிச்சைக்காரர்கள் எதிர் ...ர்த்தனர்! கமண்டலத்தைத் தாங்கி வந் ...ால் போதும், மண்டலாதிபதிகள் கூட ...டிபணிவார்கள் என்ற நம்பிக்கை இருந் ...து! முன்பெல்லாம் பிட்சாபாத்திரம் ஏந் ...ிய சாமியார்கள் பெரிய மனிதர்களாகக் ...ருதப்பட்டார்கள்!

இப்பொழுது, இந்திய அரசாங்கத்தில் ...ரிய மனிதர்கள் பிட்சாபாத்திரம் ஏந்திய ...மியார்களாகக் காட்சி அளிக்கிறார்கள்!

"பகவதி பிட்சாந்தேஹி" என்ற குரல், ...ச்சைக்காரர்களிடமிருந்து மட்டுமல்ல, ...ட்சிபீடத்திலிருக்கும் பெரிய மனிதர்க ...ளிடமிருந்தும் வருகிறது! உள்நாட்டில் பிச்சைக்காரர்கள் ஓடெடுத்து உலவுகிறார்களென்றால், உலக மார்க்கெட்டில் இந்திய அரசாங்கம் ஓடெடுத்து உலவ ஆரம்பித்துவிட்டது!

இதுவரை மாநில அரசாங்கத்திடம் ஏதாவது கேட்டால், "எங்களிடம் பணம் இல்லை, அதற்கான அதிகாரமுமில்லை!" என டில்லி ஆட்சியாளர்களிடம் காவடி தூக்கிச் செல்வார்கள்! இப்பொழுது டில்லி ஆட்சியாளர்களே காவடி தூக்கிக்கொண்டு வெளிநாடுகளில் சுற்றுகின்ற நிலை வந்துள்ளது!

பிச்சைக்காரர்கள் அதிகமுள்ள நாடாக இருந்தது! இப்பொழுது பிச்சைக்கார நாடாகவே இந்தியா ஆகிவிட்டது!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டுவிட்டு, அதற்கு வேண்டிய பணத்தைத் திரட்டுவதற்காக இந்தியாவின் பெரியவர்கள் "சாமிகள்" பிட்சா பாத்திரங்களை ஏந்திக்கொண்டு, அமெரிக்கா, இங்கிலாந்து, செர்மனி, ருஷியா, ஜப்பான்—இப்படி பணம் தரக்கூடிய "தர்ம துரைகளைத்" தேடி அலைந்தார்கள்!

எதிர்பார்த்தபடி பிச்சை கிடைக்கவில்லை! ஊர் சுற்றி ஒன்றுங் கிடைக்காமல் வெறும் ஓட்டுடன் திரும்ப மடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று ஆண்டிப் பாடிக்கொண்டிருப்பதைப்போல, எதிர்பார்த்த வெளிநாட்டு உதவிகள் கிடைக்காதநிலையில், "நாம் எதற்கும் பின் வாங்கோம், எதற்கும் நாம் அஞ்சோம்!" என நேரு பண்டிதரும், மற்றவர்களும் டில்லி மக்கள் சபையில் பேசியுள்ளார்கள்!

உரத்த குரலில்தான் பாட்டு இருக்கிறது, ஆனால் வரட்சியால் உலர்ந்த குரல் என்பதும் தெரிகிறது!

அமெரிக்காவிடம் கடன் கேட்கச்சென்று வீண் சச்சரவைக் கிளப்பிவந்த நிதி மந்திரியார்மீது கண்டனந் தெரிவித்து, மக்கள் சபையில் விவாதம் வந்தது! ...ரைப் பாதுகாக்க எண்ணிய ப... நேரு, "எப்படியிருந்தாலும் இரண்... டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நி... வேற்றிவிடுவோம்!" என்று சொ... யிருக்கிறார்!

பிரதம மந்திரியும் மற்ற... பேசுகிறபேச்சில், ஆர்வம் காண... றது; எதிர்க்கட்சியினர் கூறும் ...களை அலட்சியப்படுத்தும் ... தெரிகிறது. ஆனால் இருக்கும் நிலைமைக்கு தெளிவு காணும் வகுப்பதாக இல்லை!

"இந்தியாவில் மிகப் பெரியதாக பொருளாதார நெருக்கடி தோன்றியிருப்பதை அவர்களுடைய பேச்சுகள் மறைக்க முயல்கின்றன! பெரியதொரு சூதாட்டத்தில் இந்தியப் பொருளாதாரத்தைச் சிக்கவைத்துவிட்டு, மீளும் வகையறியாது, இந்திய அரசாங்கத்தினர் திகைப்புடன் இருக்கின்றனர்!

"திட்டத்தை எப்படியும் நிறைவேற்றிவிடுவோம்" என்று சொல்கிறார்களே தவிர, "எப்படி நிறைவேற்றப் போகிறோம்!" என்பதைவிளக்க அவர்களுக்கே தெரியவில்லை.

"திட்டத்தை நிறைவேற்றுவோம்" என்று கூறும்பொழுது, எந்த அளவு என்பதையும் கூறவில்லை! முதலில் திட்டம் முழுவதையும் அப்படியே போட்டபடி நிறைவேற்றுவதாகத்தான் ஆரம்பித்தார்கள்! அதற்கப்புறம் திட்டத்தின் "முக்கிய ..." என்பதை மட்டும் காப்பாற்... றோம் என்று சொன்னார்கள்! ...பொழுது எந்த அளவில் திட்டத்தை நிறைவேற்ற முடியுமென எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை!

இந்திய அரசாங்கத்தினர் போட்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை அப்படியே நிறைவேற்றவேண்டுமானால் எந்த அளவு பணம் வேண்டும்! இந்தக் கேள்விக்குப் பதில் யாருக்கும் தெரியாது, அரசாங்கத்துக்கே தெரியாது. ஆரம்பிக்கப்பட்ட சில திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன, கிடைத்த பணம் செலவழிக்கப்படுகிறது. வலிவுடைய சில மாநிலங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மும்முரமாக இருக்கின்றன! எந்த அளவு திட்டத்தை நிறைவேற்ற முடியும்? எந்த அளவு பணம் கிடைக்கும்? ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் முடிய எவ்வளவு காலமாகும்? இந்தக் கேள்விகளை யாரும் கொடுக்கொள்வதாகத் தெரியவில்லை, ஏதோ அடித்துப் பிடித்துத் திட்டங்களை ஆரம்பித்துவிட்டால் போதுமென மாநிலங்கள் நினைக்கின்றன; வலுத்த மாநிலங்கள் அதிகத் திட்டங்களைப் பெறுகின்றன; நோஞ்சல்மாநிலங்கள் கொஞ்சமாகப் பெறுகின்றன! டில்லி ஆதிக்கமும் புதுத் திட்டங்களை நிறைவேற்றும் வகை தெரியாத நிலையில், அதனதன் போக்கில் திட்டங்களை விட்டுவிட்டது!

வெள்ளத்தின் மத்தியில் சிக்கியவன் படகைத் தள்ளி கரைசேர முடியாமல்

(12-ம் பக்கம் பார்க்க)

.1)



மாலைப் பொழுது. கதிரவன் ற்றிசையில் போய் மறைகி ன். ஒளி குறைந்து இருள் ழகிறது. சில பரதவர்கள் ம் எளிதாகக் கடலில் அரித் க் கொண்டு வந்த பெரிய ள்களை எளிய விலைக்குக் கள் ங்கு விற்று, மகிழ்ச்சி தரும் ள்ளினைக் குடித்து விட்டு, _ற்கரை மணற்பரப்பில் தள் ாடித் தள்ளாடி ஆடிப்பாடி நகின்றனர். நண்டுகள் ங்குமிங்கும் ஓடி ஆடி ஒளி ின்றன. அங்காங்கு குளிகைப் ட்டிருக்கும் நெய்தல் மலர்க ங் காலால் துவைத்து மதி ங்கித் தள்ளாடுகின்றனர் ப்பரதவர்கள். கரிய நிற ள்ள உப்பங்கழிகள் நிரமபக் ணப்படுகின்றன. நீல நிற ள்ள நெய்தல் மலர்கள் அங் ழிகளில் பூத்துக் குலுங்குகின் ன. சிறிய ஒழுங்கான வழி ன்று குடிசையை நோக்கிச் சல்கிறது. குடிசை மணல் ணப்படுகிறது!

ழகிய காட்சி நல்கும் கரை ஓரமாய் காட்சிகளைக் ண்டுகொண்டு ஆணழகன் ருவன் வருகிருன். அப்பொ து குடிசையிலிருந்து அழ ிய நங்கை ஒருத்தி வெளிப்படு ருள். அவளை அவன் கண்டு விடுகிருன். அப்படியே அசை வற்று நின்று விடுகிருன். அவ ளும் அவனைப் பார்க்கிருள்; அப்படியே நின்று விடுகிருள்.

அவனே ஆற்றல் மிக்கவன். அவளோ அழகு மிக்கவள். இருவரும் ஒத்த பருவத்தினர். இருவரும் எதிர் பாராத வித மாக எதிர்ப்படுகின்றனர். கண் டதும் காதல் கொள்கின்றனர். காதல் நாளுக்கு நாள் வளர இருவரும் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

நம்பிநல்லன் ஒருவனிடத் தில் தலைவி காதல் கொண்டி ருப்பதைத் தோழி அறிகிருள். அவர்களுடைய காதல் நல்ல முறையில் வளர்ந்தோங்குவ தற்கு ஏற்ற பணிகளைத் தோழி உடனிருந்து செய்து வருகி ருள். தலைவனுக்கும் தலைவிக் கும் இடையே தூது சென்று வருவதும், தலைவனிடம் சென்று பகற் குறி, இரவுக்குறி யிடங்களைக் கேட்டறிவதும், தலைவியை ஊரார் யாரும் அறி யா வண்ணம் அக்குறியிடங்க ளுக்கு அழைத்துச் செல்வதும் தலைவனும் தலைவியும் குறியி டங்களில் தனியே இருந்து உரையாடும் போது அங்கே வேறு யாரும் வந்து விடா வண்ணம் பாது காப்பதும், எப்பொழுதும் தலைவிக்குத் துணையாக நிற்பதும் ஆன பணிகளைத் தோழி குறைவறச் செய்து வருகிருள்.

தலைவனும் தலைவியும் குறியி டங்களில் ஆடுவதும பாடுவ தும், ஓடுவதும் ஒளிவதும், இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதும், தாமரைப் பொய் கையில் நீராடி மகிழுவதும் ஆன களவொழுக்க விளையாட்டுக்க ளில் பொழுது போக்கி வரு கின்றனர். தலைவி தலைவனேடு பேசி மகிழ்ந்து, ஓடிஆடி விளை யாடினாலும் தன்னைத் தொட் டுப் பழக அவனுக்கு இடமளிக் காமலே இருந்து வருகிருள்.

தலைவன் அவளைத் தொடு வதற்கு நெருங்குவான். "எல் லாம் திருமணத்திற்குப் பிறகு! அதற்குள் என்மேல் கையை வைத்தால் உன்னைச் சூட்டுக் கோலால் சுட்டுப் போடுவேன்" என்று மூக்கின் மேல் சுட்டு விரலை வைத்து அதட்டுவாள். அவன் நடுங்கி நாணிக்கோணி விலகி நிற்பான். அவன் மெல்ல அவள்மேல் அறியாத வன் போல் உராயப் பார்ப் பான், அவளுக்குத் தெரியா மல் அவளது கூந்தலையோ அல்லது புடவையின் முந்தா னையையோ பிடித்து இழுக்கப் பார்ப்பான், வேறு எதன் மேலோ நினைவு வைத்துக் கொண்டு அவளது கையைப் பிடித்து விடுபவன் போல் முயலுவான். தலைவி தலைவ னின் ஏதொரு முயற்சிக்கும் இடங்கொடாமல், திருமணத் தை விரைவு படுத்திக் கொள் வதற்கான முயற்சிகளில் ஈடு படுகிருள். தலைவன் திருமணத் தைப் பற்றி ஏதொன்றும் முயற்சி செய்யாமல் களவொ ழுக்கத்தை இனிமையாகவும், இன்பமாகவும் நடத்திச் செல் லுவதிலே கண்ணுங் கருத்து மாக இருந்து வருகிருன். தலைவி தலைவனைத் தன்னிடம் சேர இடமளிக்காததால், தலை வியிடம் தலைவன் கொண்ட காதல் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போகிறது.

தலைவனும் தலைவியும் கடற் கரையருகிலுள்ள சோலையில் இரவுக் காலத்திலும், பகற் காலத்திலும் கூடியிருந்து பேசி மகிழ்வதை ஊரிலுள்ள வயது முதிர்ந்த வம்புப் பெண்டிர் சிலர் பார்த்து விடுகின்றனர். அவர்கள் தலைவன் தலைவி யைப் பற்றித் தங்களுக்குள் ளாகவே குசுகுசுவென்று ஏதே தோ பேசிக் கொள்கின்றனர். தலைவியும் தோழியும் குறியிடம் நோக்கி போகும வழியில் வம் புப் பெண்டிர்கள் சிலர் சிலரா கக் கூடியிருந்து காதொடு காதாகப், பேசுவதையும் தலைவியைச் சுட்டிக் காட்டி ஏதோ உரையாடுவதையும், தோழி கவனித்து வருகிருள். தலைவியின் களவொழுக்கம் ஊரார்க்குத் தெரிந்து விட்ட தோ என்று ஐயுறுகிருள்.

தோழி தலைவியைப்பார்த்து, "உன்னுடைய களவொழுக்கம் ஊரார்க்குத் தெரிந்து விட்ட தோ என்று நினைக்கிறேன்!" என்ருள்.

"ஏனடி! அப்படி நினைக்கி ருய்?" என்று தலைவி தோழி யைக் கேட்கிருள்.

"எனக்கு ஐயப்பாடு மெல்ல தோன்றியிருக்கிறது!" என் ருள் தோழி.

"ஐயப்பாட்டிற்குக் காரணம்?" என்று கேட்கிருள் தலைவி.

"வம்புப் பெண்டிர்கள் முச் சந்திக்கு முச்சந்தி நின்று ஏதே தோ குசுகுசு வென்று பேசு கின்றனர்!" என்கிருள் தோழி.

"அவர்கள் என்னைப் பற் றித்தான் பேசுகிருர்கள் என் பதை நீ எப்படி அறிந்து கொள்கிருய்?" என்று கேட்கி ருள் தலைவி.

"அவர்கள் உன்னையே சுட் டிச்சுட்டிக் காட்டிப் பேசுவதால் உன் களவொழுக்கத்தை அவர் கள் அறிந்து கொண்டிருக்க வேண்டும் என்றே கருதுகி றேன்" என்று தோழி கூறுகி ருள்.

"அப்படியெல்லாம் ஒன்று மிருக்காது. அவர்கள் வேறு எதைப் பற்றியோதான் பேசிக் கொண்டிருக்க வேண்டும். நாம் தான் எவ்வளவோ எச்சரிக் கையாக நடந்து கொண்டு வரு கிறோமே! நம்மைப்பற்றி அவர் கள் ஏதொன்றும் அறிய வழி யில்லை!" என்று தலைவி கூறு கிருள்.

பின்னர் தலைவியும் தோழி யும் குறியிடம் போய்ச் சேர் கிருர்கள். தலைவன் அங்கு தலைவிக்காகக் காத்திருக்கி ருன். தலைவியைக் கண்டது மகிழ்ச்சியோடு தாவி ஓடிவந்து எதிர்கொண்டழைத்துக் கொண்டு போய், ஒரு மரத்தின் நிழலில் தங்கி உரையாடி மகிழு கிருன்.

"எப்படியும் திருமணத்தை விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும்!" என்ருள் தலைவி.

"திருமணத்திற்கு இப்பொ ழுது என்ன விரைவு? சில காலம் போகட்டும் பார்த்துக் கொள்ளலாம்!" என்கிருன் தலைவன்.

"எவ்வளவு காலந்தான் கள வொழுக்கத்திலேயே காலத் தை ஓட்டுவது?"

"நான் உன்னைத் தொட்டுத் தழுவி நிற்க மட்டும் நீ இடம் கொடு; பின்னர் பார், எவ்வ ளவு காலம் வேண்டுமானாலும் இக் களவொழுக்கத்திலேயே காலந் தள்ளலாம்!"

"நம் களவொழுக்கத்தை ஊரார் அறிந்து விடுவார்க ளோ என்றுதான் அஞ்சுகி றேன்!"

"அதற்காக ஏன் அஞ்ச வேண்டும்?"

"ஏன் அஞ்ச வேண்டுமா ஊரார்க்குத் தெரிந்துவிட்டால் பிறகு தாய் தந்தையர்க்கே தெரிந்து விடும். பெற்ருேர்க் குத் தெரிந்து விட்டால் பின் னர் என்னை வீட்டை விட்டு வெளியேற விடமாட்டார்கள். அங்ஙனம் ஏற்பட்டால் உன்னைப் பிறகு பார்க்க முடியாமலேயே போய்விடும்!"

"நாம் தேர்ந்தெடுத்திருக் கும் இப்பகற் குறியிடம் ஊரார் யாருக்கும் தெரியாத ஓர் இட மாகும். எனவே அவர்கள் அறிந்து விடுவார்களோ என்று நீ அஞ்சத் தேவை இல்லை!" என்று சொல்லிக் கொண்டே மல்லிகை மலர்க் கொத்து ஒன்றை எடுத்து அவள் மீது வீசுகிருன்.

தன்மேல் வந்து விழும் மலர் கொத்தை எடுத்து முகர்ந்து பார்த்து அதன் நறுமணம் நுகர்ந்து, அதற்கு முத்த மிட்டு, அதனை மீண்டும் தலை வன் மீது சிரித்துக் கொண்டே எறிகிருள். தலைவன் அதனைத் தாவிப் பிடித்துக் கொண்டு "நீ தொட்டு முத்தமிட்ட இந்த மலருக்காவது நான் முத்தமிட்டு மகிழலாம் அல்ல வா!" என்று சொல்லி முத்த மிடுகிருன்.

இப்படிச் சிறிது நேரம் உரை யாடி மகிழ்ந்ததற்குப் பிறகு "நாழியாகி விட்டது. மாலைப் பொழுதும் மறைகிறது. அன் னைத் தேடுவார்கள். நான்

(11-ம் பக்கம் பார்க்க)

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

மன்றம்

ஞாயிறு 8—12—57 சென்னை

டில்லி ஆதிக்கம்

★

இரா. நெடுஞ்செழியன்

காஞ்சி நகரசபை வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கும் பொழுது, டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள், "மாநில அரசாங்கத்திற்குச் சிறுசிறு கவளங்களைப் பிச்சை அளிப்பது போல அளித்து ஆசை காட்டிவிட்டு, மத்திய அரசாங்கம் அதிகாரங்களையெல்லாம் தன்னிடத்தில் குவித்துக்கொள்ளும் மிகக் கேவலமான முறை வளர்ந்து வருகிறது!....இப்படி அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படும் முறையையும் போக்கையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்!" என மாநிலங்கள்மீது மத்திய அரசாங்கம் செலுத்திவரும் ஆதிக்கத்தைப்பற்றிப் பேசியுள்ளார்.

டாக்டர் ஆற்காடு இராமசாமி அவர்கள் அரசியல் முறைகளை நன்கு தெரிந்தவர்; தற்பொழுது அன்றாட அரசியலில் அவர் ஈடுபட்டில்லையென்றபோதிலும், இந்த நாட்டு அரசியலில் அவா இதற்கு முன்பு நல்லதொரு தொடர்பு பூண்டிருந்தவர்; அரசியல் அமைப்புகளிலும் நிர்வாகத் துறைகளிலும் அவர் பெரும் பங்கேற்று பெரிய பதவிகளில் இருந்து நல்ல அனுபவமும், அரசியல் நடைமுறை வகைகளைப்பற்றிய அறிவும் பெற்றவர்! ஆங்கிலேயர் காலத்தில்தான் அவருக்குச் செல்வாக்கு இருந்தது என்று கூறி ஒதுக்கிவிட முடியாது. சுதந்தர இந்தியா வந்தபின்னரும் டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள் பல முக்கிய பொறுப்புகளில் இருந்து இந்தியாவுக்காகப் பணியாற்றியிருக்கிறார். குறிப்பாக, ஐதராபாத்தில் இந்தியப் படைகள் நுழைந்ததுபற்றி ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இந்தியாவுக்கெதிராக வழக்கு வந்தபொழுது, டாக்டர் ஏ. இராமசாமி அவாகளின் அரசியல் சட்ட அறிவும் வாதத் திறமையும் தேவைப்பட்டன! உலக அரங்கில் இந்திய அரசாங்கத்திற்காக வாதிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், இந்தியாவிலுள்ள அரசியல் அமைப்புபற்றிக் கூறும் கருத்துக்களை யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது! "அதிகாரங்களும் இப்படி ஓரிடத்தில் குவிக்கப்படுவதை கண்டிக்கிறேன்" என அவர் தெரிவிக்கும்பொழுது எந்த அரசியல் கட்சியின் சார்பாகவோ, எந்த அரசியல் கட்சியையும் மனதில் வைத்தோ அவர் கூறியதாகத் தெரியவில்லை. "அதிகாரங்களெல்லாம் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்படுவது ஒரு அரசியல் கட்சிப் பிரச்சினையல்ல; இந்தப் பிரச்சினை எல்லா மாநிலங்களையும் பொறுத்ததாகும்" எனப் பொதுப்படையாகவே பேசியுள்ளார்!

மாநில அரசாங்கங்களின் அமைப்புகளையும் சட்ட திட்டங்களையும் பார்த்தால், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப்பட்ட அமைப்பாகவே முதலில் கருதப்பட்டன, வெளித்தோற்றத்துக்கும் அவ்வாறு வைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட ஆட்சிக்குரிய சில பண்புகள் மாநில ஆட்சிகளிடம் இருக்கின்றன. தனிப்பட்ட அரசுக்குரிய சட்டசபைகள், மந்திரிசபை, அரசாங்க முத்திரைகள், சின்னங்கள், அரசாங்கம் (State) என்ற பெயர் இவைகள் வைக்கப்பட்டுள்ளன! இவ்வாறு பல ஆட்சிகளைச் சேர்த்து ஒரு கூட்டாட்சியாகவே மத்திய ஆட்சி உருவாக்கப்பட்டது.

பெயரளவில் மாநிலங்கள் எனத் தனிப்பட்ட அமைப்புகள் இருக்கின்றனவேயன்றி, அதிகாரங்கள் எல்லாம் மத்திய ஆட்சியிடம் சேர்ந்துவிட்டன! "மாநிலங் வசூலிக்கும் அமைப்புகளாகிவிட்டன!" என மு கவர்னர்-ஜெனரல் சி. இராசகோபாலாச்சாரியா தடவைக் குறிப்பிட்டதைப்போல, மத்திய அரசாங்க எடுபிடி ஏவலாள் நிலைமைக்கு மாநில அரசுகள் விட்டன! முக்கியமான வரிகள் அனைத்தும் மத்திய சாங்கத்துக்குப் போகின்றன. வரி வசூலில் பெரும் தியை டில்லி கஜானாவில் கொட்டியளந்துவிட்டு, மாநில வாயில் விரலை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின் எந்தத் தேவையென்றாலும், எந்தத் திட்டமென்றாலும் லியின் உத்தரவுக்கும் கருணைக்கும் எதிர்பார்த்து, ல கட்டி வாய் புதைத்து நிற்கவேண்டிய அளவில் மாநிலங்க இருக்கின்றன!

அதிகாரங்களெல்லாம் மத்திய அரசாங்கத்திட குவிக்கப்படுவதைப்பற்றி டாக்டர் ஏ. இராமசாமி அவா ளும் வரி வசூலிக்கும் அமைப்புகளாக மாநிலங்கள் ஆ விட்டன என டாக்டர் சி. இராசகோபாலாச்சாரியா போன்றவர்களும் தெரிவிக்கிறார்கள். அவர்கள் சூச மாகச் சொல்கிறார்கள், நாம் வெளிப்படையாகச் சொல் றோம், டில்லியில் ஒரு சர்வாதிகார ஆட்சி, ஒரு ஏகாதிப திய அரசு அமைந்து வருகிறது என்று!

இந்தியாவில் இன்றைக்கு இருப்பதைப்போல, மத்தி அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் என இல்லாமல், இ கிலாந்து, பிரான்சு நாடுகளில் இருப்பதைப்போல, ஒே ஒரு மத்திய அமைப்புமட்டும் போதும் எனச் சிலர், இந்தி அரசியல் நிர்ணய சபையின்முன் கூறியதுண்டு. ஒே நாடாக இருந்தால், அவ்வாறு ஒரே ஒரு அமைப்பாக தான் இருந்திருக்கும். ஆனால் இந்தியா ஒரே ஒரு நாடா இல்லை; பல நாடுகளைக்கொண்ட, பலமொழிகளைக்கொண் ஒரு உபகண்மைாக இருக்கிறது! அவர்கள் விரும்பினாலு விரும்பாவிட்டாலும், ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பட் அரசியல் அமைப்பைப் பெயரளவிற்காவதுத் தந்தா வேண்டியிருந்தது! தனிப்பட்ட அரசியல் அமைப்பை தார்களே தவிர, அந்த அமைப்புக்குரிய தனிப்பட்ட யல் உரிமைகளைத் தர அவர்கள் மறுக்கிறார்கள்! வெ ஆடும்பதுமைகளாக மாநிலங்களை வைத்துவிட்டு, அவற்ை ஆட்டிவைக்கும் உரிமைகளையும் அதிகாரங்களையும் டில் ஆட்சி பீடம் வைத்துக்கொண்டுள்ளது!

மத்திய ஆட்சியின் அதிகாரங்களைக் கண்டிக்கும்வகை யில் தென்னாட்டில் உள்ளவர்கள் மட்டுமே பேசுகின்றன என்று சிலர் குறைகாண்போரைக் கண்டித்து, குறைகளு கான காரணங்களைக் காண மறுக்கின்றனர்! டில்லி ஆதி கத்தின் கொடுமைகளை தென்னாட்டார்கள்தாம் அதிகமா உணர்கிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்க குவிவது தங்களுக்குச் சாதகமானது என உத்தரப் பி தேசத்துக்காரரும் மத்திய பிரதேசத்துக்காரரும் பீகா காரரும் நினைக்கிறார்கள்! எனவே மாநிலங்கள் பலவீன படுத்தப்பட்டு, மத்திய அரசாங்கம் வலுப்பெறுவதை அவ கள் ஆதரிக்கிறார்கள்! ஆனால் மாநிலங்கள் உரிமையிழந்து மத்திய ஆட்சி வலுப்பெறுவது, தென்னாட்டினருக்கு கேடு விளைவிப்பதாக இருக்கிறது!

ஜனநாயகப் பண்பின்படி பார்த்தாலும், ஓரிடத்தில் அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்படுவது நல்லதல்ல! அதி காரங்கள் குவிக்கப்பட்ட இடத்தில், ஏகாதிபத்தியம் உரு வாகவும் சர்வாதிகார ஆட்சிமுறை தோன்றவும் செய்கின் றன என்பதை வரலாறு நன்கு புலப்படுத்துகிறது! அதி காரங்கள் டில்லியில் குவிக்கப்படுகிற காரணத்தா தான், அங்கொரு ஏகாதிபத்தியம் உருவாகிவிட்டது; அந்த டில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதை தான், தன் முக்கிய குறிக்கோளாக திராவிட முன்னேற் றக் கழகம் கொண்டிருக்கிறது.

C

அதிசயம், ஆனால் உண்மை!

★ (விந்தியவரம்பன்)

னைவருமே ஆச்சரியம நனர் அவர் பேசியது கு, ஆச்சரியமடைந்தனர் தைவிட அதிர்ச்சியுற்ற என்பது பொருந்தும். ர இப்படிப் பேசுகிறார்— வரா இப்படிப் பேசுவது, ன்று ஏக்கமும் ஏமாற்றமும் ன்றையொன்று முந்த கூடி ருந்தோரனைவரும் திகைத் னர். பேசிய வரும் 'ஏனே ானே! அல்ல, பேசப்பட்ட பாருளும் 'ஏதோ' ஒன்று அல்ல.

பேசியவர் இந்தியத் துணைக் கண்டத்தின் பெரிய ாநிலமாம் பம்பாய் மாநிலத் தின் கவர்னராம் திரு. பிரகாசா அவர்கள்! பேசப்பட்ட பொருளோ 'ஐந்தாண்டு திட்டம்'! இந்திய அரசியலில் அனுபவ முடையவரும், மத்திய அமைச் சில் இடம் பெற்றிருந்தவரும், முன்னாள் சென்னை கவர்னரும், இந்நாள் பம்பாயில் அந்தப் பீடத்தை அலங்கரிப்பவரு மான ஒருவர் பேசுகிறார் என் றல், அதுவும் ஐந்தாண்டு திட் டம் பற்றி; அதன் அருமை பெருமை பற்றி, அதன் தரம் பற்றி, நடத்தப்படும் திறம் பற்றி போற்றிப் புகழ்ந்து பேசு வார் என்று எதிர் பார்ப்பது இயற்கையாகும். ஆனால் அவ ரோ வெட்ட வெளிச்சமாக மறைவின்றிப் பேசி விட் தனக்கு ஐந்தாண்டுத் டம் பற்றி ஒன்றுமே தெரி யாது என்பதாக சென்ற கிழமை சென்னையில் நடைபெற்ற இந்திய மகளிர் கழகத்தின் ாற்பதாவது மாநாட்டில் கலந்து கொண்டு, ஒளவை விடுதியில் ஐந்தாண்டு திட்டம் பற்றி பேசிய போதுதான் அவர் மேற்கூறிய கருத்தை வெளியிட்டார்.

"என்னுடைய மேஜையின்மேல் ஐந்தாண்டுத் திட்டம்" என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ள பெரிய புத்தகங் கள் இருக்கின்றன. அவைகளைத் திறந்து பார்ப்பதற்குக்கூட எனக்குத் துணிவு வருவதில்லை. யாராவது ஐந் தாண்டுத் திட்டம் பற்றிப் பேசினல், எனக்குத் தெரிந்ததுபோல் நானும் பாசாங்கு செய்வேன். மற்றபடி உண் மையில் எனக்கு ஒன்றுமே தெரி யாது" என்று குறிப்பிட் டார். கூடியிருந்த முத லமைச்சர் காமராசரும் மற் றையோரும் திகைத்தனர் என்று செய்தித்தாள்கள் தெரி விக்கின்றன! இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பேசாத காங்கிரஸ் தலைவர்கள் இல்லை, அதுப்பற்றிப் பேசாத எழுதாத காங்கிரஸ் ஏடுகளும் மிகமிகக் குறைவு. பாரதப் பிரதமராம் நேரு இந்தியாவின் இணையற்ற திட்டம் பற்றிப் பேசாத நாளே கிடையாது. முன்பொரு முறை கூட அவர் குறிப்பிட்டார் இந்தியாவில் முன்பெல்லாம் 'க்ஷேத்திராடனம் செய்வது வழக்கம், இப் பொழுதெல்லாம் போவதாயிருந்தால் ஐந்தாண்டு திட்டங் கள் நிறைவேறும் இடங்களைப் போய்ப் பார்த்தால் போதும் அவைகளே உண்மை க்ஷேத்தி ரங்கள்' என்று. அந்த அள வுக்கு திட்டம் பற்றி எண்ணும் பொழுதே அவருடைய உள் ளம் விங்குவதும், தோள்க ளெல்லாம் விம்மிப் புடைப்ப தும் நாடறிந்ததாகும்.

"பாரீர் பக்ராநங்கல் திட்டத் தை! பாரெல்லாம் அதனைப் புகழ்கிறது, ஹிந்திரியின் சிறப்பு காணீர், தாமோதர், ஈராகுட் இவையெல்லாம், நவ இந்தியா வை சிருஷ்டிப்பதற்கான அடிப்படைகள்!" என்று மார் தட்டிப் பேசும் காங்கிரஸ் நண் பர்கள், திரு பிரகாசாவின் கூற்றுக்கு என்ன கூறுவரோ நாமறியோம். திரு பிரகாசா ஒருவர்தான், தாம் புரிந்து கொண்டதாக பாசாங்கு செய் வதை ஒப்புக் கொண்டார்; இன்னும் அவர்போல் வெளிப் படையாகப் பேசாமல், தமக்கும் புரியாமல் இருப்போர் எத்தனை பேரோ, யாரே அறிவர்!

முதல் ஐந்தாண்டு திட்டத் தை வெற்றிகரமாக முடித்து விட்டு, இரண்டாவது ஐந் தாண்டு திட்டத்தை துவக்கி விட்டோம் என்று பறைசாற் றும் பாரத புத்திரர்கள், முதல் ஐந்தாண்டு திட்டத்தின் விளைவுகள் எந்த அளவுக்கு இந்த நாட்டுப் பாமரனுக்கு உதவிற்று என்பதைச்சொல்ல வேண்டும். இரண்டாவது ஐந் தாண்டு திட்டத்தில் அடி வைத்துள்ள இந்த நாளில் தான் உணவுப் பற்றுக்குறை பற்றிய அபாய அறிவிப்பும், நாள்தோறும் நடைபெறுகி றது.

அவசரப்பட்டு அள்ளித் தெளிக்கிற கோலமாகத் திட் டங்கள் தீட்டப் படுவதும், அவைகள் நிறைவேற்றப் படு வதும், அதனால் பலன் பூஜ் ஜியமாவதும் நித்திய நிகழ்ச்சி களாகி விட்டன. போடுகின்ற திட்டங்கள் ஆர அமர யோசி த்து, ஆராய்ந்து, நிதானித்து ஆரம்பிக்கப் படாமலும், போ டும் திட்டத்திற்கான பணம் பாதியிலேயே செலவாகி திட் டம் முடிவடையாமல் இருப்ப தும், இடையிலே நடைபெறு கிற ஊழல்களும், அவ்வப்பொ ழுது வெளியிடப் பட்டும் வரு கிறது. இத்தகைய பணம் பாழாகும் படலம் ஒன்றல்ல, இரண்டல்ல என்பதை முன் னாள் ஒரிஸ்ஸா கவர்னராயி ருந்த திரு. குமாரசாமி ராஜா அவர்கள் ஒருமுறை குறிப்பிட் டிருந்தார். தான் வகித்த பதவி காரணமாய் வடநாட்டில் பொது மக்களின் வரிப்பணம் திட்டங்களின் பெயரால் பாழ டிக்கப்படுவதை மேலும் விளக் கமுற எடுத்துரைக்க இயல வில்லை என்றார்.

எதிர்க் கட்சிக்காரர்கள் யாரா வது, திட்டங்கள் பற்றியும், அதிலுள்ள குறைபாடுகள் பற் றியும் எடுத்துச் சொன்னால், "எதையாவது குற்றம் சொல் வதையே தங்கள் கொள்கையா கக் கொண்டவர் இவர்கள்" என்று ஒரே வரியில் பதில் சொல்ல மட்டும் காங்கிரஸ் நண்பர்கள் தவறுவதில்லை. கவனக் குறைவாலும், கண்டி ராக்டர்கள் எனப்படுவோர் அடிக்கிற கொள்ளைகளினாலும் பணம் பெருமளவில் பாழ்படு கிறது என்பதை எடுத்து பல முறையும், சர்க்கார் கணக்கு தணிக்கையாளர்களே கூறியி ருக்கின்றனர்.

இத்தகைய பல வெளிப்ப டையான ஓட்டை ஒடிசல்களைக் கூட அடைக்க வக்கில்லாத அரசாங்கம திட்டம் பற்றிப் பெருமை பேசமட்டும் தவறு வதே இல்லை.

அண்மையில் சென்னை அர சாங்கம் கூட ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பொது மக்களி டையே பிரசாரம் செய்ய ஏற்பா டுகள் செய்திருப்பதாகச் செய் திகள் வந்தன. ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவினால் நாடு பெற்ற நலமும், பெற இருக் கிற நலமும் ஏடுகள் எழுதினால் மட்டும் போதாது என்று, நாட கங்கள் மூலமும், இசை பாடல் கள், இன்னிசைச் சொற்பொழி வுகள் மூலமும் பிரச்சாரம் செய்ய முனைந்துள்ளனராம்.

இத்தகைய ஐந்தாண்டுத் திட்டங்களில் தரமும், திறமும் பற்றிப் பாமரர்களும் அறிந்தி ருக்க வேண்டுமென்று ஆசைப் படும் இவர்களிடையிலேதான், பாராளும் நிலைபெற்ற திரு. பிர காசா பேசியிருக்கிறார் 'ஐந் தாண்டுத் திட்டம் பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாது' என்பதாக! புரிந்து கொள்ளும் ஆற்றலும், வாய்ப்பும்—ஏன், புரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் கொண்ட பிரகாசா போன்றோருக்கு அது புரிய வில்லை என்றால், இந்த நாட்டு பொதுமக்கள் புரிந்து கொள்ள் வேண்டும் என்பதில் ஏனோ இத்தனை அவசரம் தெரிய வில்லை. இந்த நாட்டு மக்கள் திட்டத்தை, அதன் வளத்தை அதனால் பெறும் நலத்தை, நேரில், தம் அன்றாட வாழ்வில் காண விழைகிறார்கள். அவர் களிடம் இந்த ஏட்டுச் சுரைக ளைக் காட்டிப் பயனில்லை. அகில உலகமே புகழ்கிறது எங்கள் திட்டத்தை, பொருளாதார மேதைகள், விற்பன்னர்கள் இன்னோரன்ன பிறர், இந்திய நாட்டுக்கு வந்து திரும்பும் வெளி நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஆச்சரியமும், அதி சயமும் அடைகின்றனர்! பாராட்டுகின்றனர் திட்டங்கள் நிறைவேறுவது கண்டு, என்று கூறிக் களிப்படையும் நண்பர் களை கேட்க ஆசைப் படுகி றோம். "உங்கள் திட்டம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? அல் லது திரு பிரகாசா சொல்வது போல்வெறும்பாசாங்கு தானா!" என்று. உங்களுக்கு நீங்களே பதில் சொல்லுங்கள் போதும். திரு பிரகாசாவிடம், அவர் பேசி முடிந்த பிறகு என்ன இது இபபடிப் பேசி விட்டீர் களே என்று அங்கு கூடியிருந் தோர் கேட்டிருக்கக் கூடும், அதற்கு அவர் 'நான்' உண் மையைத்தானே சொன்னேன். உங்களுக்குமட்டும் தெரியுமா? என்று மற்றவர்களைக் கேட்டி ருக்கக் கூடும்; அவர்களும் புன் னகையை பதிலாகத் தந்திருக் சுக் கூடும்.

அகில உலகமும் புகழ வேண் டும் என்று ஆரவாரப்படுத்தப் படும், இந்த அற்புதத் திட்டங் களை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பிலுள்ளோர் அதைப் பற்றி அறிந்து வைத்திருக்கும் இலட்சணம் இது. அகில உலகிலும் காண முடியாத விசித்திரம்; அதிசயம் ஆனால் உண்மை!

திராவிடர் நாட்குறிப்பு 1958

தி. மு. கழக முழு-விவரம் அடங்கிய ஒப்பற்ற டயரி.

இதில் அண்ணாவின் 365 பொன்மொழிகள், தலைமைக் கழக செயற்குழு பொதுக்குழு விவரங்கள், பேச்சாளர் முகவரி, 1500 கிளைகளின் விவரம், தபால் தந்தி ஆவணப் பதிவு வருமான வரி கட்டணம் உள்ளன.

டயரி 1க்கு ரூ. 1—2—0,

கழிவு 20 சதவீதம். செலவு தனி.

1 டயரி வேண்டுவோர் ரூ. 1—12—0 அனுப்புக.

தி. மு. க. காலண்டர்.

15 தி. மு. க. தலைவர்களின் உருவங்கள் அமைந்த 15×20 அளவில் மூவர்ண படம் 1க்கு 6 அணா. மேற்படி காலண்டர் 1க்கு அணா 8. கழிவு 25 சதவீதம்.

50 வகை பொங்கல் வாழ்த்துக்கள் உள்ளன. மாதிரி செட் 1க்கு ரூ. 3—80 அனுப்பவும்.

போர்வாள்

138, பிராட்வே, சென்னை-1.

கல்வித்துறையும் காங்கிரசாட்சியும்

(நாஞ்சில். செ. அன்பெழில்)

—(0)—

"ஒன்றேதான் மக்கள் குலம்" என்றுணர்ந்தும் உயரிய நூல் இல்லையென இந்த வையம் ஏன்றேங்கித் தவிக்கையிலே தமிழணங்கின் நிலை யுயருமு வகையினிலே ஒரு நூல் தந்த திருவள்ளுவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற குறள்பாவின் மூலம் கல்வியின் சிறப்பையும்; கற்க வேண்டிய முறைகளையும், கற்கத் தகுந்த பொருளையும் கற்றபின் ஒழுக வேண்டிய வழியையும் தெள்ளத் தெளிய விளக்குகின்றார். "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது தமிழ் மூதாட்டியின் மூதுரை. "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில் மன்னிற்கற்றோன் சிறப்புடையோன்" என்பது பழம் பாடலின் துணிபு. கவிபாடும் திறம் பெற்ற புவியாளும் மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,

"உற்றுழி உதவியும், உறுபொருள்
கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல்
நன்றே!
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது,
அவருள்
அறிவுடையோனாது அரசுஞ்
செல்லும்!"

என்ற பாடலின் மூலம் கல்வியின் பெருமையை பேசுகின்றார்.

இந்த அளவுக்குக் கல்வியை போற்றிக் காத்து வந்தது தமிழகம். ஆனால் இன்றைய தமிழகத்தின கல்வி நிலை பிறரும் எள்ளி நகையாடும் இழி நிலையில் இருக்கிறது. உலக மக்கள் தொகையில் ஏற இறங்கப் பாதிபேர் கல்வியறிவற்றவர் என்பது அனைத்துலக கல்வி சமுதாய கலாச்சாரக் கழகத்தின் (யுனஸ்கோ) புள்ளி விவர ஒன்று தெரிவிக்கும் உண்மை. அந்தப் பாதிப்பேரில் பெரும் பான்மையவர தன்னகத்தே கொண்டுள்ள பெருமை இந்தியத் துணைக் கண்டத்துக்கு உண்டு. இந்த அளவுக்குக் கல்வித் துறையில் பின் தங்கி இருந்தும் கூட நம் நாட்டில் தீட்டப் படுகின்ற திட்டங்கள் மேலும் கல்விநிலையைப் பின்னடையச் செய்வதாகவே இருக்கிறது. காரணம் அவ்வப்பொழுது வருகின்ற அரசாங்கங்களும், அந்த அரசுகளின் அமைச்சர்களும் தங்கள் விருப்பத்துக்கும் திறமைக்கும் ஏற்ப கல்வியின் தரத்தையும் போக்கையும் மாற்றியமைக்கின்றார்கள். எனவே, கல்வித் துறையில் ஒரு நிலையான கொள்கை இல்லாமலாயிற்று. அடிக்கடி மாற்றப்படுகின்ற மாறுதல்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சலிப்பை வளர்ப்பதோடு ஒரு திட்டத்தை தழுவி நின்று பயிற்சியளிக்கவும், பயிற்சி பெறவும் முடியாமற் போகிறது. இதை ஆளுவோர் உணர்ந்து கல்வித் துறையில் புகழ் சான்ற அறிஞர் பெருமக்கள் உள்ளிட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைத்து, அவர்கள் மூலம் அரிய திட்டங்களை வகுத்து, அத்திட்டங்களுக்கேற்ப நிலையான முறையில் கல்வித் துறையைத் திருத்தி அமைப்பது நல்லது.

இதே கருத்தை ஆச்சாரியார் அவர்கள் நவம்பர் 7-ம் நாள் சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றின் மூலம், "கல்வி சம்பந்தமான சகல பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்ட இலாகா கல்வி நிபுணர்களின் பொறுப்புக்கே விடவேண்டும். ஒரு குறிப்பிட்ட பாடத் திட்டம் அல்லது கல்வி முறையின் பலாபலன்களை அடிக்கடி ஆராய்ந்து மாற்ற உபாத்திமைத் தொழிலில் உள்ளவர்களுக்கும், அவருடைய ஆலோசகர்களுக்கும் டைரக்டர்களுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். அரசியல் போட்டியின கீழ் கொண்டுவரும் பிரச்சினையாக இதை ஆக்கக்கூடாது... அதிகாரிகளும் ஆலோசகர்களும அடிக்கடி ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியதொரு விஷயத்தை அசம்பிளியில் கட்சி ஓட்டுகள் மூலம் நிறைவேற்றப்படும் சட்ட அமைப்பின்கீழ் கொண்டு வரக்கூடாது" என்று கூறி தெளிவு படுத்தியுள்ளார்.

"தலைவாரிப் பூச்சூடி உன்னை
பாடசாலைக்குப் போ என்று
சொன்னாள் உன் அன்னை
சிலையாக ஏன் அங்கு நின்றாய்
நீ சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து
கின்றாய்?"

என்று அதட்டி தம் குழந்தைகளை பளளிக்குத் துரத்த வேண்டிய பெற்றோர்கள் "சரி தாண்டா, பெரிய பள்ளிக்கூடம் போகாட்டி என்னவாம், வயலோரத்துக்கு மாட்டை ஓட்டிப் போ!" என்று தம் மகனையும், "ஏண்டி, ஒரு நாள் போகாட்டி குடி முழுகிடுமோ? உங்க வாத்தியாரிடம நான் சொல்லிக்கிறேன். அடுப்படியைப் பாரு" என்று தம் மகளையும் ஓட்டக்கூடிய நிலையில் தான் இன்று உள்ள. 'குறைந்த அளவு நூற்றுக்கு எழுபத்தைந்து என்ற அளவிலாவது மாணவர்கள் வருகைதரவேண்டும். இதற்குக் குறைந்தால் ஆசிரியருக்குச் சம்பளம் வராது.' இது அரசாங்க உத்திரவு. எனவே சடையன் மகன் இன்னான் பள்ளிமாணவன் என்றால் அவனை வயலோரத்திலோ, வரப்படியிலோ, ஊர்ப்புறத்திலோ உதவாக்கரையோடோ காணுகின்ற ஆசிரியர், பையன் உயிரோடுதான் இருக்கிறான் என்று உறுதிப் படுத்திக் கொண்டு வகுப்பு மாணவர் பட்டியலில் வருகை தந்ததாக பதிந்து கொள்ளுகின்றார். இது இன்னும் சாதாரணமாக ஆரம்பப் பள்ளிகளிலே நடந்து வரும் முறை. எனவே பள்ளியில் மாணவர்கள் தொகையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணத்தால் மாணவர்களுக்கு நண்பகல் இலவச உணவு அளிக்கும் திட்டம் ஒன்றை சட்ட சபையில் அரசியலார் நிறைவேற்றியுள்ளனர். இவ்வகைக்காக ஏறத்தாழ 10 லட்ச ரூபாயும் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. ஒரு மாணவனின் நண்பகல் உணவுக்கு ஐந்து புதுக் காசுகள் அரசாங்கம் செலவு செய்யும். மீதி தொகை ஆசிரியர்கள் ஊர் வாசிகளிடமிருந்து வசூல் செய்துக் கொள்ள வேண்டும். ஒன்றுமில்லாமல் இருப்பதை விட ஒரு நேர உணவேனும் தருவதன் மூலம் அதிக மாணவர்களை பள்ளிக்கு அழைத்து வரமுடியும் என்பது உண்மை தான். ஆனால் இதனாலேயே அறியாமையை ஒழித்து விடலாம் என்று அரசினர் எண்ணினால் ஏமாற்றமடைவர். ஒரு நேரம் போக காலையும் மாலையும் ஏழைச்சிறுவர்கள் உணவுக்கு என் செய்வர்? அவர்களுடைய பெற்றோரின் நிலை என்ன? இவையெல்லாம் கவனிக்கத் தக்கவை. ஆனால் படிப்பவர் தொகை பெருக வேண்டுமானால் பொருளாதாரச் சீர்திருத்தம் அவசியம் வேண்டும். அதுவின்றி செய்கின்ற பணியெல்லாம் புண்ணுக்குப் பூசும் புனுகாகவேயாகும்.

டாக்டர். அழகப்ப செட்டியார் ஆரம்பக் கல்விக் குழு, டாக்டர். இலட்சுமண சாமி முதலியார் இடை நிலை கல்விக் குழு ஆகிய இரு பெரும் கல்விக்குழுக்களின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இப்பொழுதுள்ள கல்வித் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஏழாம் வகுப்பு முடிய எல்லாப் பள்ளிகளிலும் பாடதிட்டமும் பயிற்றுவிக்கும் முறையும் ஒரே தன்மையதாய் இருக்கும் என்ற முடிவு அனைவராலும் பாராட்டத் தக்கது. ஒரு இடத்தில் பயில்கின்ற மாணவன் வேறு பள்ளிக்குச் சென்றால் தொடர்ந்து படிப்பதற்கு இதன்மூலம் வசதி ஏற்படுகிறது. பாட்ட பிரிவினைத் திட்டம் நான்காவது படிவத்தில் தொடங்கி ஆண்டுகள் நீடிக்கும். அ இறுதியில் மூன்று ஆண்டு கல்லூரிப் படிப்புக்கு அல்ல தொழிற் கல்லூரிக்கு நேரடியாக அனுமதிக்கப் படுவர். இது இப்பொழுதுள்ள திட்டம். நான்காவது படிவத்தில் படிக்கின்ற மாணவன், ஒரு வகுப்பிலும் தோல்வியுறாமல் வெற்றி பெற்றிருந்தானென்றால் பதினான்கு வயது உடையவனாக இருப்பான். இந்த இளம் வயதிலேயே தனக்கு ஒரு பாடத் திட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்ற திறமை அவனுக்கு இருக்குமா என்பது ஐயத்திற்குரியதே. இதை அறிஞர் பெருமக்களின் முடிவுக்கு விடுவது நல்லது. நான்காவது படிவத்துக்குமேல் படிக்கும் நேரத்தை 180 நாட்களிலிருந்து 200 நாட்களாகக் கூட்டி இருப்பதும், இடை நிலைப்பள்ளிகளில் 2700 மணிக் கூரிலிருந்து 4000மணிக் கூராக மாற்றியிருப்பதும் வரவேற்கத் தக்கது. நாட்டிலே கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து 14 வயது வரையுள்ள அத்தனை குழந்தைகளையுமாவது படிக்கச் செய்ய வேண்டும். பள்ளிப் படிப்பு முழுவதையுமே இலவச கட்டாயப படிப்பாகக் கொண்டு வந்தால் ஓரளவு நம் நாட்டிலுள்ள அறியாமை அகலமுடியும்.

இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் துவக்கப் பள்ளியில் அமுலில் இருந்து வரும் ஒரு நேரப்படிப்புத் திட்டத்தை பிற மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தலாம் என்ற எண்ணம் சென்னை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பள்ளிக்கூட இட நெருக்கடியையும், ஆசிரியர்கள் போதாமையையும் நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்பது ஓரளவுக்கு உண்மைதான், எனினும் இதனால் விளைகின்ற தொல்லைகள், கிடைக்கின்ற இலாபத்தை விட மிகுதியேயாகும். இம்முறையில் ஒரு நேரப் படிப்பு இரண்டரை மணிக்கூர் நேரம் நடக்கிறது. இந்த இரண்டரை மணிக்கூர் நேரத்துக்குள்ளாக விளையாட்டு, கலைப்பயிற்சி (Craft) இவைகளையும் அவற்றோடு கணக்கு, தமிழ், பொது அறிவு ஆகிய பாடங்களையும் பயிற்றுவிக்க வேண்டும். சொல்லிக் கொடுக்க போதிய நேரம் இல்லாமல் ஆசிரியர்கள் அல்லலுறுகின்றனர். இரண்டரைமணிக் கூரில் ஏனோ தானோ என்ற நிலையில் மாணவர்கள் படிக்கின்ற படிப்பை மீந்துள்ள நேரத்தில் மறந்து விடுகின்றனர். எனவே இம்முறையைக் கையாளுவதால் கெடுதியே மிகுகிறது.

…ண்டு ஆண்டுகளாக …நிறை பயிற்சிக் காலத் …குறைத்து, பயிற்சிப்பள் …யும் விரிவு படுத்தி அதி …ஆசிரியர்களைத் தயா …ம் முயற்சியில் அரசாங்கம் …ட வேண்டும் இன்னும் படித்தும் பயன் பெறாமல் வீணே சுற்றுகின்ற மாணவர்கள் தொகை மிகுதி. அவர்களையெல்லாம் இத்துறையில் ஈடுபடுத்தினால் ஆசிரியர்கள் தொகை பெருக வழியுண்டு.

அடுத்து தனியார் நடத்துகின்ற கல்வி நிலையங்களில் மாணவர்கள் தரும் சம்பளத் தொகையை அரசாங்கம் வசூலித்துக்கொண்டு பள்ளிநிர்வாகத்துக்காக அதில் 15சதவீதத்தை பள்ளி நிர்வாகிகளிடம் கொடுப்பது! அதோடு ஆசிரியர்களின் சம்பளத்தொகையை அரசாங்கம் கொடுத்து விடுவது என்பதும் ஒரு திட்டம். இது இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது; அனைவரும் மகிழ்ந்து வரவேற்கத் தக்க ஒன்று. ஆசிரியர்களின் சம்பளத்துக்கு இத்திட்டத்தின் மூலம் உறுதிப்பாடு ஏற்படுகிறது. தனியார் நிறு[illegible]களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பலர்உரிய காலத்தில் சம்பளம் பெற முடியாமல் திண்டாடுகின்றனர். அந்நிலை மாற இத்திட்டத்தில் வாய்ப்பு உண்டு.

“எழுத்தறிவித்தவன் இறைவனாகும்” என்பது மூதுரை. ஆனால் சமுதாயத்தில் இன்று ஆசிரியர் என்றால் கேவலம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ‘வாத்தியார் வேலையா?’ என்று சலிப்போடு கேட்கின்ற மக்களும், ‘வாத்தியார் வேலைதான்’ என்று வெட்கத்தோடு சொல்லுகின்ற ஆசிரியர்களும்தான் இன்று நாட்டில் இருக்கின்றனர். காரணம் அவர்களுக்குத் தரப்படுகின்ற சம்பளம் மிகமிக குறைவு. அஞ்சல் துறையிலும், புகை வண்டித் துறைகளிலும், வங்கியிலும், பிறத் துறைகளிலும் வேலை செய்கின்ற எடுபிடிகளுக்கும், ஏவலாளர்க்கும் தரப்படுகின்ற சம்பளத்தை விட ஆசிரியர்கள் மிகக் குறைவாகவே சம்பளம் பெறுகின்றனர். அடுத்த காரணம் ஆசிரியர்களிடம் எவ்வித அதிகாரமும் இல்லை. சாதாரண போலீசு சேவகனுக்கும், மாவட்ட அதிகாரியின் ஏவலாளுக்கும் இருக்கின்ற அதிகாரம் ஆசிரியர்களுக்குக் கிடையாது. பொதுமக்கள் ஆசிரியர்களை அணுகி எவ்வித தனிச் சிறப்பும் பெற முடியாதவர்களாக இருக்கின்றனர். எனவே ஆசிரியர்களுக்கு அதிக மதிப்பு அவர்கள் தருவதில்லை. இத்துறையில் சமுதாயம் சீர்திருந்த வேண்டும். ஆசிரியர்களின் அல்லலைக் களைந்து அவர்களது அந்தஸ்தை சமுதாயத்தில் உயர்த்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அறிஞர் அண்ணா அவர்களை அழைத்து பெரும் எதிர்ப்புக்கிடையே உலகப் பெரியார் காந்தியடிகளின் உருவச் சிலையைத் திறந்து வைத்து பெருமை தேடிக் கொண்ட வேலூர் நகர மன்றம் அண்மையில் ஒரு களங்கத்தையும் பூசிக் கொண்டது. பேராசிரியர் க. அன்பழகன், கலைஞர். மு. கருணாநிதி ஆகிய இருவர்க்கும் வரவேற்பு கொடுக்க வேண்டும் என்று ஒருவர் கொணர்ந்த தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த மன்ற உறுப்பினர் ஒருவர், “பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும், சினிமாவுக்கு கதை எழுதுபவர்களுக்கும் வரவேற்பு கொடுப்பதா?” என்று ஒரு கேள்வியைக் கிளப்பியுள்ளார். இதை ஆனந்த விகடன் இதழ் கூட கண்டித்து எழுதியது. ஆசிரியர் என்றால் அவ்வளவு கேவலமாகக் கருதுகிறது வேலூர். உலகப் பேரறிஞரான பெட்ரண்ட் ரஃசல் ஓர் ஆசிரியர், இந்தியத் துணைத் தலைவர் டாக்டர். இராதா கிருஷ்ணன் ஓர் ஆசிரியர், கேரள அமைச்சர் திரு ஜோசப் முண்டசேரி, சென்னை அமைச்சர் திருமதி லூர்தம்மாள், சைமன் திரு கக்கன், வங்க முதல் பி. சி. ரே இப்படி எத்தனையோ அரசியல் தலைவர்கள் ஆசிரியர்களாகத்தான் இருந்திருக்கின்றனர். இதை உணர்ந்து ஆசிரியர் பணி இழந்த பெருமையை மீண்டும் நிலை நாட்ட அரசாங்கமும், பொது மக்களும் பணி புரிய வேண்டும்.

ஒவ்வொரு வகுப்புக்கு உரிய பாட நூல்களை தேர்ந்தெடுக்க அரசாங்கம் குழு ஒன்று அமைத்துள்ளது. ஆனால் இன்றும் ஆறுவது வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் “எவரஸ்டு சிகரத்தின் உச்சியை இது வரை யாரும் எட்டிப் பிடித்ததில்லை” என்றும் “கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை நாஞ்சில் நாட்டில் புத்தேரி என்னும் ஊரில் வாழ்ந்து வருகிறார்” என்றும் இன்றும் படிக்கின்றனர். கால மாறுதலுக்கேற்ப பாடங்களில் ஆண்டுதோறும் மாற்றங்களை ஏற்படுத்த பாடத்திட்டக் குழு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மூன்றுவது வகுப்பு வரையுள்ள பாட நூல்களை அரசாங்கமே வெளியிடுவது என்று அரசினர் செய்துள்ள முடிவு நல்லறிவாளர்களின் பலத்த எதிர்ப்பையே பரிசாகப் பெறுகிறது. பாடத்திட்டங்களில் ஆளும் கட்சியி… கொள்கைகளைப் புகுத்துவ… தற்கு ஒரு வாய்ப்பாக இது அமையும் என்று ஆச்சாரியார், டாக்டர். சி. பி. இரா… சுவாமி அய்யர் போன்றோரும் பிறரும் அபிப்பிராயப் படுகி… றனர். எனவே பாட நூல்களைத் தயாரித்து வெளியிடும் உரிமையை தனிப்பட்ட வெளியீட்டகங்களுக்குத் தருவது நல்லது, சிறந்தது.

அடுத்து மொழிப் பிரச்சினை. (1) பிரதேச மொழி இது கட்டாயப் பாடமாக இருக்கும். அந்தந்த மாநில மொழி அந்த அந்த மாநிலத்தில் கட்டாயப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படுவது நீதி, நேர்மை, நியாயமும் கூட. (2) இந்தி அல்லது வேறொரு இந்திய மொழி. இது எட்டாவது வகுப்பிலிருந்து பயிற்றுவிக்கப்படும். தேர்வுக்கும் இம்மொழி உண்டு. இதன் மூலம் இந்தி மொழியைப் பரப்புவதற்கு அரசாங்கம் வழி வகுக்கிறது. தமிழகத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பை உணர்ந்த அரசாங்கம் மறை முகமாக இந்தி மொழியைப் புகுத்துகிறது என்பது ‘இந்தி அல்லது வேறொரு இந்திய மொழி’ என்ற சொற்றொடரிலிருந்து தெள்ளத் தெளியத் தெரிகிறது. சட்ட மன்றத்தில் வெள்ளை அறிக்கையை முன் வைத்துப் பேசிய கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் “இந்தி சட்டாயப் படிப்புக்கு வசதி செய்வது அவசியம் என்று எதிர் காலத்தில் கருதப்பட்டால், அந்த கட்டாயத்தில் இவ்விஷயத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு, மக்களின் விருப்பத்தைக் கண்டறியலாம்” என்று குறிப்பிட்டிருப்பது திரை மறைவில் சதி உருவாகிறது என்பதைத் தெளிவாக்குகிறது. (3) ஆங்கிலம் அல்லது இந்தி மொழி அல்லாத வேறு மொழி. இதன் மூலம் பிரஞ்சு, ஜெர்மன், ரஷியா ஆகிய மொழிகளையும் படிக்க வழி ஏற்படுகிறது. பெரும்பான்மை மாணவர்கள் ஆங்கிலத்தையே படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இது… கட்டாயமாக இருக்கும். ஆ… கிலம் படிப்பதாக இருந்தா… ஆங்கில இலக்கியத்தில் ஏரா… ளம் பயிற்றுவிக்க வேண்டு… என்று எண்ணாமல் ஆங்கி… சில நூல்களை நன்றாகப்படித்… புரிந்து கொள்ளவும், பிழை… யின்றி எழுதவும் பேசவும் க… பிக்க வேண்டும் என்று கருத… பட வேண்டும். “அகல உ… வதினும் ஆழஉழுவது நன்… என்ற ஔவை மொழி அறி… பெறுகின்ற துறையிலு… துணை நிற்கும். இதனை ஆ… வோர் உணர்ந்து அறி… பெரு மக்களின் துணையே… நல்ல மாற்றங்களை, அடிக்… பிறழாத மாற்றங்களை … படுத்துவது நல்லது!

உறக்கங் கொள வேண்டாம்!

நெஞ்சே!தமிழ் நெஞ்சே!யிதை உணர்வாய்துடித் தெழுவாய் !
நஞ்சாங்கொடு நஞ்சாமிவண் நணுகும்வட இந்தி
எஞ்சாதுனை அழித்தேவிடும் அதனால்மன மெண்ணி
அஞ்சாதினி எழுவாய்!எழ மாட்டாயெனில் அழிவாய் !

உன்றன்மொழி உன்றன்கலை உன்றன்தமி ழகமும்
தின்றேவிடும் பகையாய்வரும் வடவர்மொழி தகர்த்தே
கன்னல்நிகர் கன்னித்தமிழ் தன்னில்பல துறையும்
துன்னும்வகை பணிகள்புரி! தூக்கம்விடு தமிழா !

முடிசூடிய அரியேறுகள் வழியில்வரு மகனே !
கொடியோர்பிற மொழியாலுனை ஆளும்படி விட்டால்!
படுவாய்!புகழ் கெடுவாய்!துயர்ப் படுவாய்என அறிவாய் !
கடிதேவிழி கனலேயெனச் சிவப்பேறிட எழுவாய் !

அரசுங்கலை பயிற்றுங்கலை மனைகள்முத லெல்லாம்
மருந்தாந்தமிழ் வாழ்வேகொள மகிழ்வாய்ச்செயல் புரிவாய் !
திரைசூடிய உலகில்தமிழ் முழக்கம்நனி ஓங்கும்
திருநாளினைக் காணும்வரை உறக்கங்கொள வேண்டாம் !

—தமிழன்பன்.

ஓரங்க நாடகம்

அவமானம்

(இரா. இளஞ்செழியன்)

நாடக உறுப்பினர்

பொன்னம்பல முதலியார்	—	சென்னையிலுள்ள ஒரு வக்கீல்.
கற்பகம்	—	வக்கீலின் மனைவியார்.
சேகரன்	—	வக்கீலின் மகன், கல்லூரிமாணவன்
நல்லமணி	—	சேகரனின் நண்பன்.
தாயப்ப பிள்ளை, செண்பகம்	}	புதிதாக சென்னை வந்து குடியேறியவர்கள். வக்கீல் வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசிப்பவர்கள்.
வனிதா	—	செண்பகத்தின் வளர்ப்புச்செல்வி.
கார்த்திகேயன்	—	கல்லூரிப் பேராசிரியர்.
தமயந்தி	—	பேராசிரியர் மனைவி.
பொட்டு	—	வக்கீல்வீட்டு வேலைக்காரச் சிறுவன்

போலிசார், கோர்ட்டார் மற்றும் ஊரார் சிலர்,

காட்சி 1

[இரவு 10 மணி. செண்பகம் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறாள். தாயப்பப் பிள்ளை வந்து உட்காருகிறார்.]

தாயப்பப்பிள்ளை : வனிதா என்ன அதற்குள் தூங்கி விட்டாளா ?

செண்பகம் : தூங்குவதைத் தவிர வேறு வேலை என்ன இருக்கிறது.

தாய : என்ன சொல்கிறாள், ஏதாவது வழிக்கு வருகிறாளா ?

செண் : புதிதா என்ன சொல்லும். எல்லாம் பழைய இராமாயணந்தான்.

தாய : எப்படியாவது அவளைச் சரிகட்டியாக வேண்டும். இன்னும் பதினைந்து நாட்களுக்குள் தெரிவிப்பதாக வச்சிரவேலு செட்டியாரிடம் சொல்லி வந்திருக்கிறேன். இப்பொழுது அவர் கையில் நான்கு படங்களுக்கு திட்டமிருக்கிறது. அவர் நினைத்தால் நான்கு படங்களிலும் சான்ஸ் கிடைக்கும். ஒரு படத்தில் ஒரு இடத்தில் தலை நீட்டினால் போதும் பிறகு இந்தப் படமுதலாளிகளெல்லாம் நமது காலடியில் தவங் கிடக்கவேண்டும்.

செண் : நமக்கிருக்கிறது ஆசை ஆயிரம். அது தெரிந்தது ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டுமே இவள் என்னமோ ஊரிலே உலகத்திலே யாரும் செய்யாததை நாம் செய்யச் சொல்லுகின்ற மாதிரி நினைத்துக் கொள்கிறாள். அவமானம் என்று கூறுகிறாள்.

தாய : என்ன ! அவமானமா ! இதுக்கு உண்மையா வயது 22ம் ஆகிவிட்டது. அதது 12 வயதிலேயே கொஞ்சங் கையைக் காலை அசைக்கத் தெரிந்தால் சும்மா கரணம் போட்டே பாயஇடங்தேடுது. இது என்னடான்னா இப்படி பிடிவாதம் பண்ணுதே. அதைச் சொல்ல என்ன இருக்கிறது. அதை வளர்த்து, பணஞ் செலவழித்து, பாட, ஆட கற்றுக் கொடுத்த உன்னைச் சொல்லணும்.

சென் : படிப்பும் இருந்தால் கொஞ்சம் மதிப்பும் ஏற்படும் என்று எண்ணினேன்.

தாய : இப்போ உன்பேச்சைக் கேட்கிறாளோ ?

சென் : நான் என்ன செய்வது எப்படி எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படியெல்லாம் சொல்லியாகி விட்டது. குதிரைக்குத் தண்ணீரைத் தான் காட்டலாம் அதற்கு மேல் நம்மால் என்ன செய்ய முடியும்.

தாய : செண்பகம்! இது தானாக குடிக்கிற குதிரை யல்ல. இதை நாம் தான் குடிக்கவைக்க வேண்டும். ஏதோ பட்டணத்திலே நல்ல நிலை பிறக்கும் என்று வந்தால் இது நம்மைத் நடுத்தெருவில் நிற்க வைத்து விடும் போலிருக்கிறதே. ஆமாம், என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள். கல்யாணம் கில்யாணம் என்று நடக்க முடியாததைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறாளா.

சென் : எனக்கு சில நாள் ஒரு சந்தேகம் !

தாய : என்னது ?

சென் : ஒருக்கால் பக்கத்து வக்கீல் வீட்டுப் பையனைக் கண்டு ஏதாவது இருக்குமோன்னு நினைக்கிறேன். தினம் சாயங்காலம் ஆனதும் மேல் மாடிக்குப் போய் நிற்கிறாள். நானும் சில நாட்கள் போயிருக்கிறேன். அந்தப் பையன் அங்கே உலாவுவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் எதையும் என்னால் நேரில் கண்டு பிடித்துக்கொள்ள முடியவில்லை.

தாய : ஒகோ! அப்படியா சங்கதி! சரி அப்படியொன்றும் இல்லையென்றாலும் இனிமேலும் அப்படி எதுவும் எற்படாமலாவது தடுத்தாக வேண்டும், வனிதாவை ஒரு கலையுலக நட்சத்திரமாக பார்க்க வேண்டும் என்பது நமது ஆசை. அதை நிறைவேற்ற அந்த வச்சிரவேலுவால் முடியும். இதற்கிடையில் இந்தப் பசங்கள் சகவாசம் கூடாது. நீயும் கொஞ்சம் கண்காணிப்பாகவே இருக்க வேண்டும். வக்கீல் வீட்டுப் பையனா! அவன் அந்த மாடிப் பக்கம் தலை நீட்டாமல் செய்து விடுவான் இந்தத் தாயப்பன்.

சென் : ஆமாம்! போன காரியம் என்ன ஆச்சுது !

தாய : சும்மா வருவேனா ? கேட்கவே இல்லை ஒரு நூறு கொடுத்தான். இந்தப் பொண்ணு கொஞ்ச மனசு வைத்தால் பொன்னாவிஷேகமும் செய்து விடுவான்.

சென் : இவளை எப்படித்தான் வழிக்குக்கொண்டு வருவது?

தாய : எதுக்கும் அசையவில்லையானால் நமது கடைசி வேலையைக் காட்ட வேண்டியதுதான்,

காட்சி 2

[மாலை 5 மணி. பொன்னம்பல முதலியார் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஒரு வழக்குப் பத்திரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். கற்பகம் காப்பி கொண்டு வந்து கொடுக்கின்றார்.]

கற்பகம் : என்னங்க, சேகர் ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டும் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருக்கிறான்.

பொன்னம்பலம் : நீ … கொடுத்து விட்ட… என்னிடம் சொல்…

கற் : ஆமாம். உங்… பொழுதும் இ… ஒரு யோசனை… டால்...

பொன்ன : இப்பொ… எதற்கு மோட்டார் … வெறும் சைகிள் வீட்… ஒன்று இருக்கிற… அதுவே போதும்-அ… டாலும் எவருக்கும் உயி… ஆபத்து வராது. மிக… சரமான வேலைகளில் … டிருப்பவர்கள் மோட்… சைகிள் வைத்திருப்பா… இவன் காலேஜ் படிப்… மோட்டார் சைகிள் … இப்போ. அந்தக் கால… நான் கிராமத்திலி… தினம் 5 மைல் நடந்து… படித்து வந்தேன்.

கற்ப : இந்தக் கதையெல்… எதற்கு, வேண்ட… வேண்டாம்னு சொல்… கள், மோட்டார் … இல்லை என்றால் சேகர்… றும் உயிரை விட்டுட… டான்.

பொன் : உனக்கேன் கோ… பேஷா வாங்கிக்கொடு!… னைக் கேட்டதால் … னேன்.

[பொட்டு வருகி… கையில் … கவர் இ… றது]

பொட்டு : தபால்கா… தார்.

பொன் : (கவரை வா… கொண்டு) சரி, நீ போ… வர் இருப்பான் காரை… கச் சொல் நான் வெ… போகணும்.

[பொட்டு போகி… கவரைக்கிழி… உள்ளிருந்த… தத்தை… பிரித்து … கின்றார்]

பொன் : ஆ !

கற்ப : என்ன ? என்ன ?…

பொன் : அவமானம்! அ… னம்! சைகிள் வே… என்று சிபார்சுக்கு வந்… அந்த செல்வக் குழந்… ஒரு சர்டிபிகேட்! அக்க… பத்திலே தெரிந்தால்… கௌரவம் என்ன ஆகி…

[கடிதத்தை கற்… திடம் கொ… ருர். கற்… படிக்கிறாள்]

கற்ப : ஐயோ! ஏன் இந்…

பொன் : பழியாவது சு… வது எல்லாம் நீ கொடு… செல்லத்தினால் அவன்… கால்தெரியாமல் ஆடுகி…

கற்ப : ஏன் இப்படி அ… பட்டு பேசுகிறீர்கள். இ… தலையுமில்லாமல் வா… லாமல் ஒரு மொட்டை…

எப்படி நம்ப முடி

...நெருப்பில்லாமல்
...து. கொஞ்சமாவது
...ல்லாமல் எப்படி
...தம் வரும்? சரி
கடிதம் வந்ததை
...டம் சொல்லாமல்
...று அவன் வந்ததும்
...ன் நடவடிக்கைகளை
... நான் அவசரமாக
...ளியே போகவேண்டும்
...து பேசிக்கொள்கிறேன்.

[சட்டையைப் போட்டுக்கொண்டு பொன்னம்பலம் வெளியே றுகிருர். பொட்டு ஒரு துடப்பத்துடன் வருகிருன். அங்கிருந்த ஒரு நாற்காலியை எடுத்துக் கொண்டு மேல் மாடிக்குச் செல்கிருன்]

...: டேய் பொட்டு! நாற்
...லி எதற்கு?

...டு : மேல் மாடி அறையை
...தம செய்து அங்கு இந்த
...ற்காலியைப போடச்
...என்ருெரு சின்ன ஐயா
...யில் மறந்து விட்டேன்.

ஆ...! (கலவர மடைந்
...த வெளிக் காட்டிக்
...ள்ளாமல்)

..., சரி! நீ போய் வேலை
பார்,

[... ...ட்டு போகிருன்]
...ால அப்படியும் இருக்
... ஐயோ! தெய்வமே
...மகனுக்கு அப்படி ஒன்
...ஏற்படக் கூடாது! பழனி
...டவா நீ தான் துணை!

[கற்பகம் பழனியாண்டவர் படத்திற்கு கீழ இருந்த விபூதியைப் பூசிக் கொள்கிருள். சேகரன் வருகிருன்.

சேகர்! (விபூதியை
...ற்றியில் தடவுகிருள்)

...: என்னம்மா! உடம்
...கு என்ன?

... ஒன்றுமில்லை. நீ நல்லா
...நக்க வேண்டும். நம்ம
... விளக்கு அணையக்
...ாது. அதற்குத்தான்
...ண்டிக்கொண்டேன்.

...: உனக்கு எப்பொழு
... கவலை தான்!

கவலையெல்லாம் தி...
...ண்டும என்று தான்
...ண்டியிருக்கிறேன். சரி
... நான போய் காப்பி
...ண்டு வருகிறேன்.

[கற்பகம் போகிருள் பொட்டு கீழே இறங்கி வருகிருன் கையில் துடைப்பத்துடன்]

சேக : என்னடா மேல் அறை சுத்தமாக இருக்கா?

பொட்டு : உஸ்! (கற்பகம் போவதைப் பார்த்துக்கொண்டு) உங்க விஷயம் எல்லாம் தெரிஞ்சுபோச்சு.

சேக : என்னடா ?

பொட்டு : ஏதோ ஒரு கடிதம் வந்தது. அதைப படித்து விட்டு ஐயா ஏதோ கத்திருரு. அனேகமாக அது அடுத்த வீட்டு விஷயமாகத் தான் இருக்கும்.

[சேகரன் மேசையின் மேல் ஒரு கடிதத்தைப் பார்க்கிருன். எடுத்துப் படிக்கிருன்.]

"ஆ" என்று திகிலடைகிருன். பின் மறுபடியும் கடிதத்தை எடுத்த இடத்திலேயே வைக்கின்ருன்.]

சேகர் : டேய்! பொட்டு! விஷயம் யாருக்கும் தெரியக் கூடாது!

பொட்டு : சரிங்க.

சேகர் : சரி, நீ போ.

பொட்டு : இந்தாங்க. அது கொடுத்திச்சு,

[ஒரு கடிதத்தை சேகரனிடம் கொடுக்கிருன். முக மலர்ச்சியுடன் சேகரன் வாங்குகிருன்]

சேகரன் : அவளா கொடுத்தாள்! உன்னை எங்கே பார்த்தாள்.

பொட்டு : மத்தியானம் மேல் மாடிக்குப் போனேன், அது அங்கேயிருந்து கூப்பிட்டு இந்தக் கடிதத்தை அவரு கிட்ட கொடுத்திடு என்று சொல்லிக்கொடுத்தது.

சேக : சரி நீ போ! யாரிடமும் சொல்லாதே!

[பொட்டு மேல் மாடிக்குப் போகிருன். கற்பகம் காப்பியுடன் வருகிருள்]

சேக : (காப்பியைக் குடித்து விட்டு) அம்மா, அவசரமான வேலையொன்று இருக்கிறது. நான் போய்வருகிறேன்.

கற்ப : சீக்கிரமா வந்துவிடு!

சேக : சாப்பாட்டிற்கு சரியா வந்துவிடுவேன்.

காட்சி 3

[நல்லமணிவீடு. நல்லமணியும் சேகரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

நல்லமணி : வீட்டில் யாருமில்லை! எல்லாம் எக்சிபிஷனுக்கு போயிருக்கிருர்கள். இங்கேயே பேசலாம். என்ன அவ்வளவு அவசரமான காரியம். அவளிடமிருந்து ஏதாவது பதில் கிடைத்ததா என்ன ?

சேகரன் : பிரச்னை சிக்கலாகி விட்டது.

நல்ல : உன்னுடைய காதல் பிரச்னை ஆரம்பத்திலேயே சிக்கலானதாயிற்றே. புதிய செய்தி என்ன?

சேக : கிடைத்தது இரண்டு ஒன்றுகுளிர்ச்சி! மற்ருென்று அதிர்ச்சி!

நல் : என்னப்பா, விஷயத்தைச் சொல்.

சேக : அவள் என்னைக் காதலிக்கிருள்.

நல் : ஆகா...! ஏ வீரனே! வனிதை வாக்கு கிடைத்த பிறகு வாட்டமேன். வாழ்வெல்லாம் இனி......

சேக : டேய், டேய்! கொஞ்சம் நிறுத்து. அதிர்ச்சியைக் கேட்காமல் குதிக்கின்ருயே.

நல்ல : என்னடாது?

சேகர் : அப்பாவிற்கும் அம்மாவிற்கும் விஷயம் தெரிந்து விட்டது. அவள் வீட்டிலும் அப்படித்தானும்.

நல் : போச்சுடா! ஏய்! காதல்னு கொஞ்சம் பொறுமையும் இருக்கவேண்டும். அவசரப்பட்டு வேலைகளை ஆரம்பித்துவிட்டாயா என்ன ?

சேக : மணி வேடிக்கை இருக்கட்டும் விஷயத்தைக் கேள். யாரோ மொட்டைக் கடிதம் எழுதியிருக்கிருர்கள். அப்பாவும் அம்மாவும் சந்தேகப் படுகிருர்கள். அவளிடமிருந்து இன்றுதான் கடிதம் வந்தது. நாம் நினைத்தபடி வச்சிரவேலு அங்கே வட்டமிடுகிருன். அவனை வற்புறுத்துகிருர்களாம்.

நல் : இப்பொழுது என்ன செய்யவேண்டும்?

சேக: வனிதாவை அங்கிருந்து எப்படியாவது அழைத்து வந்துவிடவேண்டும்.

நல் : அது கஷ்டமான காரியமல்ல அதற்குப் பிறகு ?

சேக : அப்புறம் என்ன செய்வது...நீதான் ஒரு வழி சொல்லவேண்டும்.

நல் : கொஞ்சம் நிதானமாக யோசித்தால்தான் முடியும், இதில் அவசரப்பட்டால் காரியம் கெட்டுவிடும்.

சேக : எப்படியாவது சீக்கிரம் ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டும். நாம் தாமதித்தால் அங்கே அவள் நிலைமை மோசமாகிவிடக்கூடும்.

நல் : எனக்கு ஒரு யோசனை தோணுது.

சேக : என்னது ?

நல்ல : புரொபசர் கார்த்திகேயனைக் கண்டு கேட்டால் ஏதாவது ஒரு வழி சொல்வார். நம்மிடம் அவருக்கு ஒரு மதிப்பு உண்டு.

சேக : மணி! நீ எதை வேண்டுமானுலும் செய்! எப்படியாவது வனிதாவை முதலில் அவர்களுடைய பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும்.

நல்ல : சரி இப்பொழுதே நான் அவர் வீட்டுக்குப் போகிறேன். நீ வரவேண்டாம். நீ நேராக வீட்டிற்குச் செல். அப்பாவிடமும் அம்மாவிடமும் எப்பொழுதும் போல் நடந்துகொள். இரவு எத்தனை மணியானுலும் உன்னை வந்து காண்கிறேன்.

சேக : ஆல்ரைட்! வருகிறேன்

[சேகர் போகிருன்.]

காட்சி 4

[கார்த்திகேயன் வீடு. கார்த்திகேயன் கையில் ஒரு சிகரெட்டுடன் உலவிக் கொண்டிருக்கிருர். நல்லமணி அவரைப் பார்த்தபடியே இருக்கிருன். கார்த்திகேயன் வந்து உட்காருகிருர்.]

கார்த்தி : சேகர் உண்மையிலேயே அவளைத் திருமணம் செய்து கொள்ளும் உறுதியோடு இருக்கிருனு?

நல்ல : சேகரை நம்பலாம் சார்,

கார்த்தி : ஏனென்ருல் அந்தப் பெண்ணின் வாழ்வு கெட்டுவிடக் கூடாது.

நல்ல : இல்லை சார் சேகரின் காதல் உண்மையானது.

கார்த்தி : சரி, அவனுடைய பெற்ருேர்கள் இதற்கு ஒப்புக் கொள்வார்களா?

நல்ல : நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனுல் வீட்டை விட்டு வெளியேற சேகர் தயாராக இருக்கிருன்.

கார்த்தி : அது தவறு. உணர்ச்சி வசப்பட்டு அம்மாதிரி எதையும் செய்துவிடச் சொல்லாதே. கூடியவரை பெற்ருேரின் சம்மதத்தைப் பெற அவன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நல்ல : சார்! பொன்னம்பல முதலியாரின் போக்கு உங்களுககுத் தெரியாது. அவர் அந்தக் காலத்துப் பேர்வழி. சீர்திருத்தப் பேச்சுக்களெல்லாம் அவர் செவியில்ஏருது.

கார்த்தி : சரி. நான் ஒரு வழி சொல்கிறேன், அதன்படி செய்ய வேண்டும்.

நல்ல : சொல்லுங்க சார்.

கார்த்தி : வனிதாவை எவருக்கும் தெரியாமல் இங்கு அழைத்து வந்து விடவேண்டும்.

நல்ல : அதைச் செய்து விடலாம் வெகு சுலபமாக! ஆனுல் அதற்கப்புறம் ஆகவேண்டிய காரியங்கள்?

கார்த்தி : அதை நான் கவனித்துக் கொள்கிறேன்.

... of the page is dark

நல்ல: இங்கே வனிதாவைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அவ்வளவுதானே இப்பொழுது செய்ய வேண்டிய வேலை.

கார்த்தி: ஒரு விஷயம், ஜாக்கிரதை! அந்தப் பெண் இங்கு வருவதை யாரும் பார்த்து விடக்கூடாது.

நல்ல: சரி, நாளைக்கே அழைத்து வந்து விடலாமோ?

கார்த்தி: எப்பொழுது அழைத்து வந்தாலும் சரி முதலில் எனக்குத் தெரிவித்துவிட்டு அழைத்து வா.

நல்ல: சரி, சார்! அதற்கான வேலையை இப்பொழுதே கவனிக்கிறேன்

கார்த்தி: ஒன்று சொல்ல மறந்துட்டேன். வீட்டை விட்டு கிளம்பும்போது நகைகளையெல்லாம் கழற்றி வைத்து விட்டு வரவேண்டும்.

நல்ல: சரி சார்! நான் வருகிறேன்.

கார்த்தி: போய் வா! பதட்டமில்லாமல் எதையும் செய்ய வேண்டும்.

[நல்லமணி போகிருன். அவன் போனபின் தமயந்தி அறைக்குள் நுழைகிருள்]

தமயந்தி: எவ்வளவு நாழியாக பேசிக்கொண்டே இருப்பீர்கள். சாப்பிட நேரமாகவில்லையா?

கார்த்தி: தமயந்தி! உனக்குத் துணையாக இருக்க ஒரு பெண் வரப்போகிருள்.

தம: யார் வருவது, என்ன விஷயம்?

கார்த்தி: கலியாணப் பெண் ஒன்று நம்ம வீட்டிற்கு வரப்போகிறது. மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை வந்து அழைத்துப் போகிற வரை நம் வீட்டில் தங்கியிருக்கும்.

தம: என்ன கூத்து இது. யாருக்குக் கல்யாணம்?

கார்த்தி: எல்லாம் சாப்பிட்டபின் விபரமாகச் சொல்கிறேன். முதலில் சாப்பாடு எடுத்து வை.

[இருவரும் போகிருர்கள்.]

காட்சி 5

[இரவு மணி ஒன்பதரை. கற்பகம் பத்திரிகை ஒன்றை பார்த்துக் கொண்டிருக்கிருள். தெருவில் கார் சந்தம் கேட்கிறது. தொடர்ந்து பொன்னம்பல முதலியார் வருகிருர்.]

கற்பகம்: ஏன் இவ்வளவுநாழி? சாப்பாட்டுக்கு நேரங் காலம் ஒன்றும் கிடையாதா!

பொன்: ஆமாம் சாப்பாடு ஒன்றுதான் குறைச்சல்! அவனைக் கேட்டாயா, என்ன சொல்கிருன்.

கற்: இந்த விஷயத்தை எப்படி அவனிடம நான் கேட்பது?

பொன்: பிறகு நான் கேட்க முடியுமா? எதற்கும் அவன் உன்னிடம் சொல்லித்தானே காரியத்தை முடித்துக் கொள்கிருன். நீதான் கேட்க வேண்டும்,

கற்: அதெல்லாம் எதற்கு? பெண்ணைப் போய்ப் பார்த்து சீக்கிரம் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

பொன்: சரிதான்! காரியம் அந்த அளவிற்கு முற்றிவிட்டதா? இன்னுங் கொஞ்சம் போனல் இந்தாங்க உங்கள் மருமகள் என்று அவளைக் கொண்டு வந்து நிறுத்தி விடுவாய் போலிருக்கிறதே!

கற்: இது என்ன உளறல்!

பொன்: பிறகு என்னென்னு கேட்கிறேன்?

கற்: நல்ல குடும்பத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து ஏற்பாடு செய்யச் சொன்னல்!

பொன்: ஓகோ, அப்படியா! ஆமாம், நான் பெண் பார்ப்பதற்கு இவன் சம்மதிக்க வேண்டுமே. ஏனென்ருல் பெண் பார்த்து எல்லாம் முடிந்த பிறகு இவன் முடியாது என்ருல் என் மானமே போய் விடும்.

கற்: எல்லாம் சம்மதிப்பான்!

பொன்: அது அவன் வாயால் வரவேண்டும்,

கற்: அப்படியென்ருல் நீங்களே அவனைக் கேளுங்கள்.

பொன்: சரி, எங்கே அவன் கூப்பிடு.

கற்: கோடி விட்டு நல்லமணி வந்து மேலே பேசிக்கொண்டிருக்கிருன். அவன் போனதும் சேகரைக் கேளுங்கள்.

பொன்: அந்த நல்லமணியைப் பார்! நல்ல மணியான பையன். அடுத்த வருஷம் மேல் படிப்புக்கு லண்டனுக்கு அனுப்பப் போவதாக முத்துக்கிருஷ்ணன் சொன்னுன். நம்ம பிள்ளையாண்டான் சுழி இப்படி சுற்ற வைக்கிறது.

கற்: கொஞ்சம் பேசாமல் இருங்கள். அவர்கள் வருகிருர்கள்.

[நல்லமணியும் சேகரும் வருகிருர்கள்]

பொன்: என்ன நல்லமணி! அப்பா, அம்மா எல்லோரும் சௌக்கியமா?

நல்ல: சௌக்கியம் மாமா.

பொன்: என் செய்வது என்னிடம் பெண் இல்லை. இருந்தால் நீ மாமா என்று கூப்பிடுவதற்கே உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருப்பேன்.

நல்ல: என்னக்குப் பெண் தருவது இருக்கட்டும், முதலில் சேகருக்கு ஒரு நல்ல அழகான, படித்த, குணமுள்ள பெண்ணைப் பாருங்கள். எங்களுக்குள் ஒரு பந்தயம். அதில் நான் ஜெயித்து விட்டதால் அவன்தான்முதலில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.

சேகர்: ஏய்! பேசாமலிருக்க மாட்டாய்!

நல்ல: உனக்குச்சொல்ல வெட்கமாய் இருக்கலாம், ஆகையினல்தான் நானே சொல்லி விடுகிறேன்.

கற்: ஆமாம் அதென்னப்பா பந்தயம்?

நல்ல: சென்ற பரீட்சை ஆரம்பமாவதற்குமுன் ஒரு பந்தயம் வைத்துக்கொண்டோம். அதன்படி பரீட்சையில் யார் அதிக மார்க்கு வாங்குகிறர்களோ அவனே முதலில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டோம். என்னை விட சேகர் இருபத்தி நாலு மார்க்கு அதிகமாக வாங்கி பந்தயத்தில் என்னிடம் தோற்று விட்டான். ஆகையால் அவன் தான் முதலில் திருமணம் செய்து கொள்ள வேண்டியவன்.

பொன்: அப்படியென்ருல் ஒரு பெண்ணையும் பார்த்துச் சொல்லேன்.

நல்ல: ஐயையோ! மாமா! அந்த வேலையை மட்டும் என்னிடம் கொடுக்காதீர்கள். இவனுக்குப் பிடித்தமான அழகான, படித்த குணமுள்ள ஒரு பெண்ணை இனி நான் எங்கேயும் போய் தேடி கண்டுபிடிக்க முடியாது. நான் வருகிறேன் மாமா, வருகிறேன் மாமி!

பொன்: போய் வா!

[நல்லமணி போகிருன் பின்னல் சேகரும் போகிருன்.]

பொன்: நல்ல பையன்கள்!

கற்: பார்த்தீர்களா! சேகரைப் பற்றி சந்தேகப பட்டீர்களே. உடனே கல்யாண ஏற்பாடுகளை கவனியுங்கள்.

[சேகர் திரும்ப வருகிருன்.]

பொன்: சேகர், நல்லமணி சொன்னபடி இந்த வருஷமே உனக்கு திருமணத்தை நடத்திவிட வேண்டுமென்று எண்ணுகிறேன். ஏதாவது குறையிருந்தால் சொல்.

சேக: அப்படியே செய்யுங்கள்.

[சேகர் போகிருன். பொட்டு வருகிருன்.]

கற்: ஏய் பொட்டு, மேலே ஹாலைக் கூட்டிவிட்டு படுக்கையெல்லாம் தட்டிப் போடு. இந்தப் பேப்பரையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய் மேலே வை.

[பொட்டு பத்திரிகைகளை அடுக்குகிருன். பொன்னம்பலம் எழுந்திருக்கின்ருர்.]

கற்: வாங்க சாப்பிட.

[கற்பகம், பொன்னம்பலம் போகிருர்கள். சேகர் வருகிருன்.]

சேக: டேய், பொட்டு!

பொட்: என்னங்க.

சேக: (சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து) இதை எப்படியாவது அவளிடம் சேர்த்திட வெண்டும்

பொட்: சரிங்க.

சேக: ஒருவருக்கும் தெரியக்கூடாது. ஜாக்கிரதை! நாளை காலைக்குள் அவளிடம் இது சேர்ந்திட வேண்டும்.

பொட்: ராத்திரியே கொடுத்து விடுகிறேன்.

[சேகர் போகிருன். பொட்டு கடிதத்தை மடியில் வைத்துக் கொள்கிருன்.]

காட்சி 6

[கார்த்திகேயன் வீடு. கார்த்திகேயனும் தமயந்தியும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

கார்த்திகேயன்: என்ன இன்னும் வரவில்லை! ஏழுமணிக்குள் அழைத்து வந்து விடுவதாக மணி சொன்னுனே.

தமயந்தி: வீட்டிற்குத் தெரியாமல் கிளம்புவதென்ருல் சாதரணமான காரியமா? கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருக்கலாம்.

கார்: நீ இங்கிருப்பதைப் பார்க்க வனிதா மிகவும் ஆச்சரியப் படுவாள்.

தம: என்னை அடையாளந் தெரிந்து கொள்கிருளோ என்னவோ. எட்டு வருஷங்களுக்கு முன் பார்த்தது. அவளும் எப்படி மாறியிருக்கிருளோ.

கார்த்தி: நல்லவேளையாக அந்தப் பெண் உனக்கு அறிந்தவளாகப் போய் விட்டாள். இல்லையென்ருல் நீ இந்தவிஷயத்தில் இவ்வளவு அக்கரை காட்டுவாயா?

[வெளியில் 'சார் சார்' என்று சத்தம் கேட்கிறது.

கார்த்தி: ஆமாம்! மணிதான். வந்து விட்டார்கள்!

[கார்த்திகேயன் எழுந்து போகிருர். நல்லமணி வனிதா இருவரையும் அழைத்துக் கொண்டு வருகிருர்.]

தம: வாம்மா, வனிதா! உட்கார்!

[வனிதா தமயந்தியை உற்றுப் பார்த்தபடி உட்காருகிருள். தமயந்தி பக்கத்தில் உட்காருகிருள்.]

தம: என்னைத் தெரியவில்லை வனிதா?

வனி: (புரிந்து கொண்டவளாய் ஆச்சரியத்துடன்) அக்கா!

[தமயந்தியின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுகிருள். நல்லமணிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியத்தோடு நிற்கிருன்.]

ம: அசடே! ஏன் அழுகிருய், எழுந்திரு! இனி இது உன் வீடுதான்!

[வனிதாவைவிமிர்த்தி முகத்தைத் துடைக்கிருள்.]

கார்த்தி: (மணியைப் பார்த்து) தஞ்சாவூரில் வனிதா வீட்டுப் பக்கத்து வீட்டில்தான் எட்டு வருஷங்களுக்கு முன் தமயந்தியும் அவள் அபபாவும் குடியிருந்தார்கள்.

நல்ல: பேஷ்! பேஷ்! கதை வேடிக்கையாகப் போகுதே!

தம: வனிதா அப்பொழுது சின்னப் பெண்ணுக இருந்தாள். இப்பொழுது எப்படி மாறியிருக்கிருள்.

வனி: அக்கா, நீங்கள் மிகவும் இளைத்து இருக்கிறீர்கள். குரலிலிருந்தான் உங்களை அடையாளங் கண்டு பிடிக்க முடிந்தது. நீங்க செய்கிற உதவியை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்.

கார்த்தி: (மணியைப் பார்த்து) சரி, அடுத்து ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டும். முதலில் வனிதாவின் பிறந்த தேதிக்கு ஒரு சர்டிபிகேட் வாங்க வேண்டும்.

வனி: என்னுடைய எஸ். எஸ். எல். சி. சர்டிபிகேட் புத்தகத்தில் பிறந்த தேதி இருக்கிறது. அது ஒன்றை மட்டும்தான் நான் வீட்டிலிருந்து எடுத்து வந்தேன்.

[கையில் இருந்த புத்தகத்தைக் கார்த்திகேயனிடம் கொடுக்கிருள். அதை வாங்கிப் பிரித்து பார்க்கிருர் கார்த்திகேயன்.]

கார்த்தி: இனி எதற்கும் கவலை வேண்டாம். கோர்ட்டுக்குப் போனுல் கூட நமக்குத்தான் வெற்றி. வனிதாவுக்கு இப்பொழுது 22 வயது முடிந்து விட்டது. சட்டத்தின்படி அவள் இபபொழுது சுதந்திரமுள்ளவள். அவள் விருப்பத்தில் எவருக்கும் தலையிட உரிமையில்லை.

நல்ல: அப்படியென்ருல் உடனடியாக ரிஜிஸ்டர் திருமணம் செய்து விடலாம்.

கார்த்தி: எனக்கு இன்னெரு யோசனை தோன்றுகிறது.

நல்ல: என்ன?

கார்த்தி: எப்படியாவது சேகரின் பெற்ருேரின் சம்மதத்தைப் பெற்றுவிட வேண்டும்.

நல்ல: சார் கல்லிலிருந்து நார் சுலபமா உரித்து விடலாம். ஆனுல் இது விஷயத்தல் "சரி" என்ற வார்த்தையை அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

கார்த்தி: அதற்கும் வழி இருக்கிறது.

நல்ல: நாம் எத்தனை வழியில் சென்ருலும் சரி. அவருக்கு ஒரே வழிதான்.

கார்த்தி: கேள் மணி! முதலில் வனிதா இங்கிருப்பது தாயப்பனுக்கும் செண்பகத்திற்கும் தெரிய வேண்டும்.

வனி: ஐயையோ! வேண்டாம்! வேண்டாம்!!

நல்ல: என்ன சார் இது?

தம: என்னங்க, உங்களுக்கு திடீரென்று புத்தி மாறிவிட்டதா என்ன. இந்தப் பெண்ணை அவர்களுக்குத் தெரியாமல் இங்கு கொண்டு வருவதற்கு அவர்கள் எவ்வளவு கஷ்டபப்பட்டார்கள்.

கார்த்தி: நான் சொல்வதைக் கேளுங்கள்; வனிதாவுக்கு இனி எவ்வித ஆபத்தும் வராது. வனிதா இங்கிருக்பது அவர்களுக்குத் தெரிந்தால், அழைத்துச் செல்ல இங்கு வருவார்கள், நான் அனுப்ப மறுப்பேன். வச்சிர வேலு செட்டியின் உதவி கொண்டு என் மீது போலீசில் புகார் செய்து வழக்குப் போடுவார்கள். வழக்கு நடக்கும். எனக்காகவும் வனிதாவுக்காகவும் பொன்னம்பல முதலியாரே நீதிமன்றத்தில் வாதாடி, வெற்றி பெறுவார். பிறகு அவரே ஒத்துக் கொள்ளும்படி வனிதாவுக்கும் சேகருக்கும் திருமணம் நடைபெறும்.

நல்ல: சார், பிளாட் நன்ருயிருக்கிறது. ஆனுல் எல்லாம் ஒன்றுகூடி வரவேண்டுமே.

கார்த்தி: முயற்சி திருவினையாக்கும்!

தம: இந்தாங்க, நீ எதைச் செய்தாலும் சரி, வனிதாவுக்கும் சேகருக்கும் கலயாணம் முடிகிற வரை வனிதா இங்குதான் இருக்க வேண்டும், அவ்வளவுதான்.

கார்த்தி: சரி, சேகர் எப்போது வருவான்?

நல்ல: 10 மணிக்கு மேல் வரச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது அவன் வீட்டில்தான் இருப்பான். வனிதாவைக் காணுது தேடும்பொழுது சேகர் வீட்டிலேயே இருந்தால்தான் அவன்மீது யாரும் சந்தேகங் கொள்ள மாட்டார்கள்.

கார்த்தி: சேகர் வந்தவுடன் யோசித்து ஒரு முடிவு செய்வோம்.

தம: சரி எழுந்திருங்கள்; வாம்மா! காப்பி பலகாரமெல்லாம் ஆறிப் போயிருக்கும்.

[எல்லோரும் போகிருர்கள்.]

[இரவு 10 மணி. போலீஸ் ஸ்டேஷன். ஹெட் கான்ஸ்டபிள் எழுதிக் கொண்டிருக்கிருர். எதிரில் தாயப்பனும் செண்பகமும் உட்கார்ந்திருக்கிருர்கள்.]

ஹெட்கான்ஸ்டபிள்: என்ன அடையாளம் சொல்லுங்கள்!

தாயப்பபிள்ளை: நல்ல அழகாயிருக்கும்.

ஹெட்: ஆமாம், அழகு என்று ஒரு அடையாளமா இருக்கு.

செண்பகம்: அது வெள்ளைப் புடவை கட்டியிருந்தது.

ஹெட்: (குறித்துக் கொண்டு) வேறு அங்க அடையாளங்கள் ஏதாவது,

செண்: நல்ல சிகப்பு நிறம். வலது முழங்காலில் ஒரு பெரிய தழும்பு இருக்கும்.

ஹெட்: (குறித்துக் கொண்டு) சரிதான்! கண்டு பிடிப்பதற்கு ஒரு பத்துப் பேரிடம் அடி வாங்கிஞல்தான் முடியும். அது போகட்டும். நகைகள் ஏதாவது உடம்பில் இருந்ததா?

[தாயப்பன், செண்பகத்தைப் பார்க்கிருன்.]

செண்: நகை ஒன்றுமில்லைங்க. எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டுதான் கிளம்பியிருக்கு.

ஹெட்: (குறித்துக் கொண்டு) சரி, வயது என்ன இருக்கும்?

தாய: மைனர் பெண்ணுங்க.

ஹெட்: சரியான வயசு?

செண்: பதினேழு முடிந்துவிட்டது.

ஹெட்: (குறித்துக் கொண்டு) கல்யாணம் ஆகி விட்டதா?

தாய: இனிமேல்தான் கல்யாணம் செய்யனும்.

ஹெட்: ஏனய்யா! இது என்ன போலீஸ் ரிப்போர்ட்டா அல்லது உங்க வீட்டு பொடலங்காய் கணக்கா. கேட்பதற்கு சரியான தகவலைச் சொல்ல வேண்டும்.

செண்: கல்யாணம் ஆகவில்லை.

ஹெட்: (குறித்துக் கொண்டு) பெண் வீட்டை விட்டுக் கிளம்பும்போது என்ன மணி இருக்கும்.

தாய: வெளியே கிளம்பும் போது நான் பார்த்திருந்தேன்னு, உங்க கிட்ட வந்திருக்க மாட்டேனே.

ஹெட்: யோவ்! உத்தேசமான ஒரு நேரத்தைக் கேட்டால்?

தாய: 6 மணிக்கு மேல்தான் இருக்க வேண்டும்.

ஹெட்: இந்தா பாரய்யா! அந்தப் பெண்ணை நீங்க கடைசியாகப் பார்த்தது எத்தனை மணிக்கு, தேட ஆரம்பித்தது எத்தனை மணிக்கு?

செண்: கடைசியா பார்த்தது ஐந்தே முக்கால் மணியிருக்கும். ஏழு மணிக்கு தேட ஆரம்பித்தோம்.

ஹெட்: ஆமாம், ஒன்னேகால் மணி நேரமா ஒருபெண் வீட்டில் இருக்கிறதும் இல்லாததும் தெரியாது?

செண்: குளிக்கப் போவதாகச் சொன்னுள். ரொம்ப நாழியா ஆளைக் காணுேமே என்று குளிக்கிற அறையைப் பார்த்தால் இல்லை.

ஹெட்: (குறித்துக் கொண்டு) இது விஷயமா உங்களுக்கு யார் பேரிலாவது சந்தேகமிருக்கா.

தாய: சந்தேகப்பட்ட இடமெல்லாம் பார்த்து விட்டோம்.

[ஹெட் கான்ஸ்டபிள் ஒரு ரிப்போர்ட் பதிவு செய்கிருர்]

ஹெட்: சரி இதில் இரண்டு பேரும் கையெழுத்துப் போட்டு விட்டுப் போங்கள். பெண்ணைப் பற்றிய தகவல் கிடைத்தா சொல்லியனுப்பு கிருேம்.

[செண்பகமும் தாயப்பனும் கையெழுத்துப் போடுகிருர்கள்.]

தாய: சீக்கிரமா கண்டி பிடித்துக் கொடுங்கள் சார்!

ஹெட்: ஏனய்யா! அந்தப் பெண் தான் பொகிற இடத்தை இங்கே சொல்லிட்டா போயிருக்கு, உடனே போய் கூட்டி வர. போய்யா, ஏதாவது தகவல் வந்தால் சொல்லியனுப்புகிருேம்.

தாய: சரிங்க.

[செண்பகமும் தாயப்பனும் எழுந்து செல்கிருர்கள்.]

(அடுத்த இதழில் முடியும்)

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ. 15·00
ஓராண்டு	...	ரூ. 8·00
ஆறுமாதம்	...	ரூ. 4·00
தனி இதழ்	...	16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ. 18·75
ஓராண்டு	...	ரூ. 10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போய் வருகிறேன்!'' என்று சொல்லி விட்டு தலைவி தோழியை அழைத்துக் கொண்டு இல்லத்திற்கு ஏகுகிறாள்.

போகும் வழியில் சில வம்புப் பெண்டிர் தலைவியிடம் வந்து, "ஏனடி உன் காதலனை அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டாய்? உன் கை வளையல்கள் நொறுங்கும்படி அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டு இன்னும் சிறிது நேரம் கூடி மகிழ்ந்திருப்பதுதானே! ஏன் அதற்குள் வந்து விட்டாய்?'' என்று இண்டல் மொழி பேசத் தலைப் படுகின்றனர்.

அந்தச் சொற்களைக் கேட்டதும் தலைவிக்குத் தூக்கிவாரிப் போட்டது போன்று ஆகிவிடுகிறது. அவள் திகைத்துப் போய், நாணத்தால் தலையைக் கவிழ்ந்து, கைகளால் முகத்தை மூடிக்கொண்டு ஒரே ஓட்டமாய் வீட்டிற்கு ஓடிப் போய் விடுகிறாள். தோழி அவளைப் பின் தொடர்கிறாள்.

தன்னுடைய களவொழுக்கம் எல்லோர்க்கும் தெரிந்து விட்டதே, இனி என்ன நடைபெறுமோ, தாய் தந்தையர்கள் எப்படியெல்லாம் சிறிச்சினந்து கொள்வார்களோ என்று எண்ணி அச்சத்தால் உளநடுக்கங் கொண்டு தலைவி வீட்டின் ஒரு மூலையில் சோர்ந்து உட்கார்ந்து விடுகிறாள்.

தோழி தலைவியை நெருங்கி "நான் அப்பொழுதே கூறினேனே, உன்னுடைய களவொழுக்கம் ஊரார்க்குத் தெரிந்து விட்டது போலிருக்கிறது என்று. நீதானே என்னுடைய சொல்லைப் பொருட் படுத்தாமல், யாருக்கும் தெரிய வழியில்லை என்று கூறிப் பெரும் போக்காக இருந்து விட்டாய்!'' என்று கூறுகிறாள்.

அதற்குத் தலைவி "நான் எவ்வளவோ எச்சரிக்கையாகத்தான் இருந்துவந்தேன். என்னுடைய களவொழுக்கத்தை எப்படி அந்த வம்புப் பெண்டிர் அறிந்து கொண்டார்களோ, தெரியவில்லை!'' என்கிறாள்.

"இப்படிப் பட்ட செய்திகளை மோப்பம் பிடிப்பதிலே அந்த முதுமைப் பெண்டிர் கைதேர்ந்தவர்களாயிற்றே! அவர்கள் எப்படியும் கண்டுபிடிக்காமலா இருந்து விடுவார்கள்?' என்று தோழி சொல்லுகிறாள்.

"இதனைத் தாய் தந்தையர்க்குத் தெரியாதபடி தடுப்பது எப்படியடி!'' என்று தலைவி வினவுகிறாள்.

"தலைவர் உடனடியாகத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை!'' என்கிறாள் தோழி.

"அவரைத் திருமணத்திற்கு உடனடியாக இணங்க வைப்பது எப்படி? நான் அவரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறேன், அவர் காலத்தை கடத்திக்கொண்டே வருகிறார்! நாம் நாளை என்ன செய்ய இயலும்?'' என்கிறாள் தலைவி.

"நாளை நாம் குறியிடத்திற்குப் போகாமல் இங்கேயே இருந்து விடுவோம். தலைவர் எப்படியும் நம்மைத் தேடிக் கொண்டு வருவார் அப்பொழுது நமது இடுக்கண்களையும் எண்ணத்தையும் அவரிடம் மறைமுகமாகக் கூறிவிடுவோம்!'' என்கிறாள் தோழி.

முதல் நாள் இரவு செய்த முடிவுப்படி தலைவியும், தோழியும் மறுநாள் பகற்பொழுதில் பகற்குறி இடத்திற்குச் செல்லாமல் வீட்டிலேயே தங்கி விடுகிறார்கள். தலைவன் பகற்குறியிடத்திற்குக் குறிப்பிட்டநேரத்திற்கு வந்து நெடிது நேரம் காத்துக் கொண்டிருக்கிறான். மாலைப்பொழுது சாயும் நேரம் வரையிலும் தலைவி வராது போகவே, தலைவிக்கு என்ன நேரிட்டதோ, அவளை அவளது தாய் தந்தையர் வீட்டிலேயே நிறுத்தி விட்டார்களோ அவளுக்கு உடல் நலம் ஏதும் குன்றி விட்டதோ என்று பலவாறாக எண்ணிக் கொண்டு தலைவன் தலைவியின் வீடு நோக்கிச் செல்கிறான்.

தலைவியும் தோழியும் வீட்டிற்குப் பின்புறமுள்ள மாமரத்தில் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும் கயிற்று ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு, தலைவனின் வரவைச் சுற்றுமுற்றிலும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொழுது சாய்ந்த இருள் சூழும் வேளையில் தலைவன் மெல்ல அடி வைத்து தலைவியின் வீட்டை நெருங்குகிறான் தலைவியும் தோழியும் கயிற்று ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடுவதைப் பார்த்துவிட்டுத் தலைவன் மாமரத்தின் அடியில் வந்து ஒளிந்து நின்று கொண்டு, தோழியும் தலைவியும் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள் என்பதை உற்றுக் கேட்கத் தலைப்படுகிறான்.

தலைவன் வருவதைக்கடைக் கண்ணால் பார்த்துவிட்ட தோழி, அதனைத் தலைவிக்குக் குறிப்பால் உணர்த்தி, இருவரும் ஏதும் அறியாதவர்கள் போல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு ஊஞ்சலாடுகிறார்கள். தலைவன் மரத்தில் அடியில் ஒளிந்து நிற்பதைக் கண்டு கொண்ட தோழி, தலைவனின் காதில் விழுகிற வண்ணம் தலைவியோடு உரையாடுகிறாள்.

"நமது தலைவர் இந்நேரம் சோலைப் பக்கம் வந்து காத்திருந்து விட்டுத் திரும்பி இருப்பார் என்று கருதுகிறேன!'' என்கிறாள் தோழி.

"அவருக்கு என்ன? எனக்கு ஏற்படும் தொல்லைகளா அவருக்கு ஏற்படப் போகின்றன?'' என்கிறாள் தலைவி.

"உன்னுடைய தொல்லைகளைப் பற்றி அவரிடம் நீ ஏதும் சொல்லுவதில்லையா?''

"எவ்வளவோ சொல்லியிருக்கிறேன்! எவ்வளவோ தடவைகள் சொல்லியிருக்கிறேன்! நேற்று எனக்கு ஏற்பட்ட தொல்லையை அவர் அறியவா போகிறார்? எனக்கு உயிர் போயல்லவா உயிர் வந்தது!''

"உனது களவொழுக்கம் ஊரிலுள்ள வம்புப் பெண்டிர்களுக்குத் தெரிந்து விட்டது போலிருக்கிறது என்று நான் கூறியபோது, நீதான் பொருட் படுத்தாமல் இருந்து விட்டாய!''

"நேற்று வீடு திரும்பும் போது அந்த வம்புப் பெண்டிர் என்னை வழிமறித்துக் கொண்டு இன்னும் சிறிது நேரம் அக்காதலனைக் கைவளையல் நொறுங்கும்படிக் கட்டியணைத்து முத்தமிட்டுக் கூடி மகிழ்ந்திருபபதுதானே என்று கேட்ட சொற்கள் என்னை எப்படியெல்லாம் துளைத்தன தெரியுமா? என்னுடைய மானமெல்லாம் அப்படியே பறிபோவது போன்ற உணர்ச்சி என்னை ஆட்டிப் படைத்தது! வம்புப் பெண்டிர்க்குத்தெரிந்த செய்தி தாய் தந்தையர்க்குத் தெரிந்து விட்டால்......! என்று எண்ணினேன். என்னுடைய குலையே நடுங்குவதுபோல் ஆகி விட்டது. அந்த அதிர்ச்சி இன்னமும் அடங்கவில்லை!''

"அப்படியானல் குறியிடங்களுக்கு இனிமேல் செல்லமாட்டாயா?

"இவ்வளவு நிகழ்ந்த பிறகு எப்படிச் செல்ல முடியும்? நான் தலைவரைத் தொட்டுப் பழகாமல் இருக்கும்போதே இவ்வூரார் இவ்வளவு சொல்லுகிறார்களே, நான களவொழுக்கத்தி கடைப்பிடிக்கக் கூடிய செயல்களெல்லாம் செய்தால், இந்த ஊரார் இன்னமும் என்னென்ன பாடு படுத்துவார்களோ, தெரியவில்லை!''

"இனித் தலைவரை நீ பார்க்கப் போவதில்லையா?''

"நானக அவரை எங்கே எப்படிப் பார்க்கமுடியும்? திருமண ஏற்பாட்டுடன் அவர் நம் இல்லம் நோக்கி வந்தால்தான் அவரைப் பார்க்க வாய்ப்பு ஏற்படும!''

"அவர் திருமண ஏற்பாட்டுடன் வருவாரா?''

"அவர் அண்மையில் வருவாரென்று எனக்குத் தோன்றவில்லை!''

இந்த உரையாடல்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தலைவன், அவர்கள் முன்னே வந்து "நான் விரைவில் திருமண ஏற்பாட்டுடன் வருகிறேன்! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்!'! என்று கூறிவிட்டு, விரைவாகச் சென்று மறைந்து விடுகிறான்.

தம் எண்ணம் கை கூடிற்று என்று தலைவியும் தோழியும் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்து வீட்டிற்குள் ஓடுகிறார்கள்!

* * *

இது நற்றிணை—239 - ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு வரைந்து காட்டப் பட்டகாதற் காட்சியாகும். இந்த நற்றிணைச் செய்யுள் நெய்தல் திணையின் பாற்பட்ட, 'தோழி தலைமகன் சிறைப்புறமாக இருக்கச் சொல்லியது' என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். இதனை இயற்றியவர் குன்றியனார் என்னும் புலவராவார். இவர் குறுந்தொகை பாட்டு ஒன்றில் மேலைக் கடற்கரையைப் பற்றிப் பாடியுள்ளதால், சேர நாட்டைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் என்று சிலர்எண்ணுகின்றனர். மாலைப் பொழுதை இவர் அழகுபட நுவன்றுள்ளார். நற்றிணையில் இரண்டும், குறுந்தொகையில் ஆறும், அகத்தில் இரண்டுமாகப் பத்துப் பாடல்கள் இவர் படியதாக கிடைத்திருக்கின்றன.

ஞான்ற ஞாயிறு குடமலை மறைய
மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்
இனிதுபெறு பெருமீன் எளிதினின் மாறி
அலவன் ஆடிய புலவுமணல் முன்றில்
காமர் சிறுகுடிச் செல்நெறி வழியின்
ஆய் மணி பொதியவிழ்ந் தாங்கு நெய்தல்
புல்லிதழ் பொதிந்த பூத்தப மிதிக்கும்
மல்லல் இருங்கழி மலிநீர்ச் சேர்ப்பதற்கு
அமைந்துதொழில் கேட்டன்றே இலமே முன்கை
வார்கோல் எல்வளை உடைய வாங்கி
முயங்கெனக் கலுழ்ந்த இவ்வூர்
எற்று வதுகொல்யா மற்றென்று செயினே.

[நற்றிணை—239]

[பொழிப்புமை: மேலைத் திசையிலே சாய்ந்து விழுகின்ற கதிரவன் அங்குள்ள குன்றின் பக்கம் மறைய, மயங்கிய மாலைக் காலத்தில், கள்ளினைக் குடித்து மகிழ்ச்சியுற்ற பரதவ மக்கள், தாம் வருந்தாது பெற்ற பெரிய மீனை எளிதாக விற்று, நண்டு விளையாடிய புலவு நாற்றத்தையுடைய மணல் பரந்த முன்றிலையுடைய, பார்ப்பவர்க்கு விருப்பம் தரத்தக்க சிறு குடியின் கண்ணே செல்லற்ற ஒழுங்கு பட்ட வழியில் அழகிய நீல மணியின் குவியலை

[...] ரித்துப் பரப்பினுல் [...]போல நெய்தலின் புற [...]இதுநால் சூடப்பட்ட மல[...]ரக் கெடுப்படி மிதித்துச் [...]செல்லும் வளப்பத்தையு[...]டைய கரிய கழி பொருந்[...]திய நிரம்பிய கடல் நீரையு[...]டைய நெய்தல் நிலத்தலை[...]வனுக்கு யாம மனை[...]பொருந்து இதுகாறும் அவனிட்ட தொழிலைக் கேட்டு அதன்படி நடந்தோமேயில்லை; அங்ஙனமாக என்னை நோக்கி 'உன் முன்கையிலணிந்த நெடிய சிறந்த தொழிலமைந்த ஒளி பொழிந்திய வளைகள் உடையும்படி அச்சேர்ப்பனை அழைத்து அணைத்து முயங்குவாயாக' என்று கூறிப் புலம்பியழுத இவ் ஊர்தான் யாம் இனி அவனுக்கு அமைய நடக்க வல்ல வேறொரு காரியத்தைச் செய்து விட்டால் என்ன பாடுபடுமோ? [ஞான்ற-சாய்ந்த; மான்ற-மயங்கிய; அலவன்-ஞெண்டு]

களவொழுக்கம் பற்றி ஊராரிடத்தில் ஏற்படும் பழிச்சொல்லுக்குத் தலைவி எவ்வளவு நடுங்குகிருள் என்பதும், அப்பழியை நீக்கிக்கொள்ள திருமணத்தை எந்த அளவுக்கு எதிர்பார்த்து நிற்கிருள் என்பதும் இச் செய்யுளால் அழகுற உணர்த்தப்படுகின்றன.

காதலர்களின் களவொழுக்கச் செய்தியை, சிறு குறிப்பு கிடைத்தாலும் ஊரிலே பரப்பிடுவதற்கு வம்புப் பெண்டிர் எவ்வளவு துடியாய்த் துடிக்கிருர்கள் எனபதை, "களவொழுக்கத்திற்கு உரியது முழுவதும் செய்து விட்டால் ஊர் என்ன பாடுபடுமோ?" என்ற தலைவியின் கூற்றுமூலம் இனிதாக அறியலாம்.

மீனைக் கொடுத்து கள்ளினை விலைக்கு வாங்கும் பண்டமாற்று வாணிக முறை இருந்தது குறிபிடப் படுகிறது,

நெய்தல் மலர்களின் குவியலுக்கு நீலமணிகளின் குவியல் உவமையாகக் கூறப் பட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

* * *

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[...]கசோர்ந்து போய், படகு எப்[...]டிப போகிறதோ அப்படியே [...]பாகட்டும் என விட்டுவிடுவது [...]பால, பொருளாதார நெருக்[...]டியில் சிக்கிய இந்திய அர[...]சாங்கம் நாட்டை மீட்கும் வகை [...]தரியாது, அப்படியே விட்டு [...]விட்டது! வெள்ளத்தின் [...]ட்டத்திலிருந்து படகை விடு[...]வித்துக் கரை சேர்க்காவிட்[...]டால், வேகமாக இழுக்கப்[...]பட்ட அந்தப் படகு, அடுத்து [...]வரும் நீர்வீழ்ச்சியில் சிக்கி [...]ழே விழுந்து உடைந்து சிதறி[...]விடும்! அதைப்போல இந்தியா ஆபத்தான பொருளாதார [...]வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் [...]சென்றுகொண்டிருக்கிறது!

வரப்போகும் ஆபத்தான [...]நிலையைக் கவனிக்க மறுத்து, "திட்டத்தை எப்படியும் நிறை[...]வேற்றலாம்!" என நேரு பண்[...]டிதரும், மற்றவர்களும் எப்ப[...]டிக் கூறுகிருர்கள் என்பது [...]தெரியவில்லை!

4800 கோடி ரூபாய்க்குப் [...]போடப்பட்ட திட்டம், விலை[...]வாசி உயர்வுகளால் 6000 கோடி [...]ரூபாய்க்குச் செலவு உயர்ந்து [...]விட்டது! ஆச ஐந்தில் ஒரு [...]பங்கு திட்டத்தை வெட்டினுல் [...]தான, முதலில் குறிப்பிட்ட [...]4800 கோடி ரூபாய் அளவுக்[...]குள் முடிக்கலாம்!

இரண்டாவதாக, இந்த [...]குறைக்கப்பட்ட 4800 கோடி [...]ரூபாய்கூட எப்படி கிடைக்கும் [...]என்று தெரியவில்லை. நிதி[...]மந்திரி கனம் டி. டி. கே. அவர்[...]கள் "வெளி நாட்டிலிருந்து [...]எதிர்பார்க்கப்பட்டதில் 700 [...]கோடி ரூபாய் கிடைக்கவில்லை, [...]அது வரவேண்டும். மேலும் [...]உள்நாட்டுப் "பங்கில் 1000 [...]கோடி ரூபாய் அளவுக்கு" [...]நோட்டுகள் அடிக்கவேண்டி[...]யிருக்கும்! என்று கூறியுள்ளார்! ஆக, போட்ட திட்டத்தில் மூன்றில் ஒரு பங்குக்குப் பணம் இல்லை! குறைகிற பணத்துக்கெல்லாம் நோட்டு அடித்து வெளியிடுவதென்ருல், போட்ட திட்டத்துக்கான பணத்தைக் "காகித" அளவில் சேர்த்துவிடலாம்! இவ்வாறு நோட்டுகளை அடிக்க ஆரம்பித்தால், பொருளாதார நெருக்கடி இன்னும் அதிகச் சிக்கலடையும்! விலைவாசிகள் உயர்ந்து, நோட்டுக்குள்ள மதிப்புக் குறைந்து, வெளிநாட்டிலும் உள்நாட்டிலும், ரூபாய் நாணய மதிப்பும், அரசாங்க நாணயத்துக்கு (அதாவது நம் பிக்கைக்கு) உள்ள மதிப்பும் குறையும்! கடைசியாக காகித நோட்டுகள் மிஞ்சும், அதை மதித்து யாரும் வாங்கமாட்டார்கள!

கடைவீதியில் நாணயக் குறைவான கடைக்காரனுக்குத் தரப்படுகிற மதிபபுதான், இந்திய அரசாங்கத்துக்கு உலக மார்க்கட்டில் கிடைக்கும்!

திட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள், அவற்றில் எதை நடத்துவது எதை நிறுத்துவது என்று அரசாங்கத்துக்குப் புரியவில்லை! பட்டினத்தார் ஒரு பாடல் பாடியிருக்கிருர்,

"பொல்லாப்பொலின கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்!
காப்பதற்கும் வகையறியீர்,
கைவிடவும் மாட்டீர்!
ஆப்பசைத்தக் குரங்கதனைப்போல
அகப்பட்டுக் கொண்டீர்!"

இதைப்போல, இந்திய அரசாங்கம் கலகலென பொலபொலென பலத் திட்டங்களைப போட்டுவிட்டது! இப்பொழுது காப்பதற்கும் வழியறியாமல் கைவிடவும் மாட்டாமல், ஆப்பசைத்தக் குரங்கைப்போலத் திண்டாடுகிறது.

வகை தெரியாமல் பெற்றுவிட்டக் குழந்தைகள் மட்டுமல்ல, சாயலில் வகைவகையான குழந்தைகளாகவும் அவை இருக்கின்றன! சமதர்மம் என்கிற கணவனைமட்டும் நேசிக்கிற மனையாட்டியாக,காங்கிரசு ஆட்சி கூறிக்கொள்கிறது. ஆனல் அந்த அருமை மனையாட்டிக்குப் பிறக்கிற திட்டக் குழந்தைகளில் ஒன்றுக்கு பிர்லாவின் சாயல் இருக்கிறது; ஒன்றுக்கு டாட்டாவின் முகச்சாடை இருக்கிறது; ஊரில் பெரும் சீமான்களாக விளங்குபவர்களின் சாயல் அந்தக் குழந்தைகளிடம் இருக்கின்றன! ஒவ்வொரு முதலாளித் தந்தையும் தன்தன் திட்டக் குழந்தையைக் காப்பாற்றத் தயாராக இருக்கிருன்!

இந்திய அரசாங்கத்தின் சார்பாக நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் அமெரிக்கா சென்ருர், உலக பாங்கி டைரக்டர்களைப் பார்த்தார், காமன்வெல்த் நாட்டு நிதிமந்திரிகளையெல்லாம் சந்தித்தார். ஒன்றும் பலனில்லை! ஆனல், டாடா நிறுவனத்தின் அதிபரான ஜே. ஆர். டி. டாடா அமெரிக்காவுக்குப் போய், உலகப் பாங்கி டைரக்டர்களைச் சந்தித்து, தனது டாடா இரும்பு-உருக்குத் தொழிற்சாலைக்கு 16 கோடி ரூபாய் கடன் வாங்கி வந்துவிட்டார்! தங்களுக்குச் சாதகமான திட்டங்களை நிறைவேற்ற பெரும் முதலாளிகள் முன்னிற்கிருர்கள்! கடைசியில் பொதுவான திட்டங்கள் பின்தங்கி நிற்கின்றன!

திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அளவு பணம் கிடைக்காது என்று தெரிந்துவிட்டபின்கூட, என்ன செய்யலாம் என்று ஒரு முடிவுக்கு வராமல் இந்திய அரசாங்கம் அடுத்த ஏப்ரல் மாதத்தில் முடிவு செய்யலாம் என்றிருக்கிருர்கள். அதற்குள் இன்னும் மோசமான நிலைக்குத்தான் இந்தியாவின் பொருளாதார அமைப்பு வீழ்ந்து கிடக்கும்!

திட்டத்தை மீட்க முடியாத நெருக்கடியில்; கண்ணை மூடிக்கொண்டு இந்திய அரசாங்கம் நடக்க ஆரம்பித்துள்ளது!

இவர்கள் போட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில், ஐந்தாண்டு என்பது நிறைவேறிவிடும். திட்டம்தான் நிறைவேருது போலிருக்கிறது! O

சேலம் தேர்தல் வழக்கு நிதி!

சேலம் தொகுதி தேர்தல் வழக்கை உயர் நீதி மன்றங்கள் வரை சென்று, சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு, சீரிய முறையில் நடத்த வேண்டி, கீழ்க்கண்டவர்கள் பெருந்தன்மையோடு நிதி தந்து உதவியுள்ளனர். அவர்களுக் கெல்லாம் என் மகிழ்ச்சியும் நன்றியும் வணக்கமும் உரியவாக! —இரா. நெடுஞ்செழியன்

9-11-57 வாணியம்பாடி தி. மு. க. பொதுக்கூட்டத்தில்: உண்டியல் மூலம் ரூ. 14-88; அண்ணு படிப்பகம் ரூ. 4-94; தனிப்பட்டவர்கள் ரூ. 7 06.

11-11-57 மலேயா கம்பார் அவ்வை புத்தக நிலையம் ரூ. 6-72.

15-11-57 அம்பத்தூர் பொதுக்கூட்டத்தில்: அம்பத்தூர் தி.மு.க. ரூ. 30-00; தண்டுறை பட்டாபிராம் தி.மு.க. ரூ. 5-00.

21-11-57 வட்டத்தூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில்: வட்டத்தூர் தி. மு. க. 50-00; தனிப்பட்டவர்கள்-அமைப்புக்கள் ரூ. 8-00.

21-11-57 ஆதிவராகநத்தம் பொதுக்கூட்டத்தில்: புவனகிரி தி. மு. க. ரூ. 37-25.

22-11-57 அம்மையப்பன் பொதுக்கூட்டத்தில்: அம்மையப்பன் தி. மு. க. ரூ. 5-00; எா. சுப்பிரமணியம் ரூ. 2-01; திருட்டிறைபுரம் தி. மு. க. ரூ. 2-00; சிவநத்தம் ரூ. 1-01; எஸ். சோமு ரூ 1-01;

23-11-57 ஆலடிக்குமுளை பொதுக்கூட்டத்தில் தி. மு. க. ரூ. 10-10;

2311-57 பாப்பாநாடு பொதுக்கூட்டத்தில்: தனிப்பட்டவர்களும் அமைப்புக்களும ரூ. 7-00;

23-11-57 ஏறுதி பொதுக்கூட்டத்தில்: தனிப்பட்டவர்களும் அமைப்புக்களும ரூ. 4-00.

24-11-57 தஞ்சை சிறப்புக்கூட்டத்தில்: நகர தி. மு. கழகம் ரூ. 501-00.

25-11-57 செந்தாரப்பட்டி பொதுக்கூட்டத்தில்: தனிப்பட்டவர்கள் ரூ. 3-12.

25-11-57 ஆத்தூர் பொதுக்கூட்டத்தில்: உண்டியல் வசூல்: தனிப்பட்டவர்கள் ரூ. 30-00.

நிதி அனுப்பவேண்டிய முகவரி :—

இரா. நெடுஞ்செழியன்,
93, பிராட்வே, சென்னை-1

"மன்றம்" அச்சகத்தில் (93 [...] வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெ[...] [...] ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண் : 55697)